சபரிமலைக்கான பக்திப் பயணம்...




# இந்து முகம்





சாமியே சரணம் ஐயப்பா...




Dero
GUEST HOUSE
(Near Airport)
10 minutes to airport
Negambo - Beach Site
Rooms are available
Garden
Bedroom
Parking
Phone Number:-0212052240
Mobile Number :- 0766889839
Booking Center :- #52,Palaly road,Thirunelvely,
North, Jaffna





சிவகாமி மஹால்
திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழா,
ஒன்றுகூடல்கள், ஏனைய பொது நிகழ்வுகள்
நவீன வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட மண்டப வசதி
Online Booking: www.shivahamimahal.com
Adiyapatham Road, Thirunelvely.
T.P: 021 205 2288
Mobile: 077 932 6147
email:sivakaamymakal@gmail.com




GLOBAL
Hardware
390, Main street,
Bastian Junction,
Chundukuli
Mobile
0776679401

சிறி நதியா
டிஜிட்டல் கலர் லாப்
Sree Nathiya
Digital
Color Lab
Nikon
108A, Navalar Road, Jaffna. 021 222 8412

CAPS
BookShop
பொங்கலை
முன்னிட்டு
விலை கழிவு
குறைந்த விலையில்
அரிதான தரமான
புத்தகங்கள் விற்பனைக்கு
#52,Palaly road,
Thirunelvely North,
Jaffna
T.P.No:-0212052240

# ஸ்ரீ ஐயப்பன் வரலாறும் விரத மகத்துவமும்



ஆன்மீகச் செம்மல் க.தம்பிராஜா - குருசாமி (ஐயப்பன் அடிமை) கனடா

### மனிதனைத் தெய்வமாக்கும் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் விரத மகத்துவம்

எங்கும் நிறைந்தவர் இறைவன் அவனை அகக் கண்ணால் இதய சுத்தியுடன் மட்டும் காண முடியும். இப்பூமியில் உயிர்களாகிய நாம் எண்ணற்ற காலமாகப் பிறப்பதும் இறப்பதுமாக இருக்கின்றோம். எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்து விட்டோம். நாம் பெறாத உயிர்களுமில்லை எம்மைப் பெறாத உயிர்களும் இல்லை. உயிர்கள் எங்கிருந்து பிறக்கின்றன? ஏன் பிறக்கின்றன? பின் எங்கு செல்கின்றன? விஞ்ஞானிகள் கூடக் கண்டிலர். மெய்ஞ்ஞானி கூறுகிறார் உயிர் புல்லாகி, பூடாய், புழுவாய், மரமாகிப் பலவுருவாய், பறவையாய், பாம்பாய், கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய், வல்லரக்கராகி, முனிவராய், தேவராய் இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்து விட்டோம் என்று விஞ்ஞான யுகத்தில் அஞ்ஞானம் போக்கி மெய்ஞ் ஞானத்தைச் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து அகண்டாகரமாய் எங்கும் நிறைந்து விளங்கும் ஐயப்பன் ஸ்ரீ பூதநாதன் எல்லா உயிர்களின் உடம்பிலும் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார்.

நாம் பசி, தாகம், சோர்வு ஆகியவற்றை இலட்சியம் செய்ய வானளாவிய மரங்கள், முட்கள், கொடிகள், கற்பாறைகள், மேடு பள்ளங்கள் மட்டுமன்றி விஷ ஜந்துக்கள், மிருகங்கள் நிறைந்த வனந்தாண்டி இறைவன் சன்னதியைச் சென்று பிம்பத்தில் சன்னித்தியமாகியிருக்கும் பகவானைத் தரிசித்து மகிழ்கின்றோம்.

நம் அகத்துள்ள கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சபரிநாதனைக் காண வேண்டுமாயின் ஆசைத் தளைகள், அகங்காரம் என்ற மரங்கள் தீய எண்ணங்கள் என்ற மிருகத்தையும், ஆணவம், கன்மம், மாயை என்ற மாயவனத்தைக் கடந்தால்தான் ஐயன் ஸ்ரீ ஐயப்பனைத் தரிசிக்கலாம்.

இப்பூவுலகில் பகவான் ஐயன் அவதரித்த நீ என்னைக் காண வேண்டுமாயின் பற்றற்ற கருமம் செய். மனம் மாசு பெறாத தூய மனதில் ஞானம் ஒளிரும் என்று கூறினார்.

ஞானமே வாழ்க்கையின் இலட்சியம். நற்கருமத்திற்க இடையூறு விளைவிப்பது காமம், வெகுளி, பேராசை, குரோதம், ஆணவம் முதலியன. இவற்றை வெல்ல "சுவாமியே சரணம் ஐயப்பா" என்ற தாரக மந்திரத்தைத் தூய மனதுடன் ஓதி அவனது அருட் கடாற்சத்தைப் பெறவேண்டும்.

ஐயனைக்காண ஒரு மண்டலம் நோன்பு இருக்க வேண்டும். (41நாட்கள்) என்பது தொன்று தொட்டு வரும் மரபு. நோன்பு மனிதனைப் பக்குவப்படுத்துகி றது. மாலை அணிந்து கொள்வது நமக்கு நாமே விரும்பி விதித்துக்கொள்ளும் கட்டுப்பாடே. விஞ்ஞான யுகத்திற்குத் தேவையானவற்றை மெய்ஞ்ஞானிகள் அன்றே கூறியிருக்கின்றார்கள். வனங்களைக் கடந்து சன்னிதானத்தை அடையும்போது பதினெட்டுப் படிகள் தாண்டியே செல்ல வேண்டும். இந்த பதினெட்டுப் படிகளும் தத்துவம் புலன் ஐந்து, பொறி ஐந்து, பிராணன் ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் இவற்றைக் கடந்தாலே ஐயனைக் காணலாம்.

### ஏன் ஒரு மண்டலம் நோன்பு அனுஷ்டிக்க வேண்டும்?

மனிதனை ஆட்டிப்படைக்கும் பஞ்சேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றைத் தன் இஷ்டம் போல் அலையவிடாமல் கட்டுப்படுத்தவே ஒரு மண்டல நோன்பு.

கடும் சுகவீனமுற்றவருக்கு வைத்தியர் தொடர்ந்து மருந்து கொடுத்துச் சுகப்படுத்துவர். அது போலவே இந்த நீண்ட விரதமும் அமைகிறது. இந்த பஞ்சேந்திரியங்கள் நல்லவற்றையே செய்ய இறைவன் படைத்திருக்கிறான்.

### ஸ்ரீ ஐயப்பன் வரலாறும் விரத மகத்துவமும்

ஆனால், அவை தன்னிஷ்டப்படி உண்ண வேண்டாத உணவுகளை உண்டு,
மனம் பார்க்கத் தகாத காட்சிகளைப் பாத்து, முகரத்தகாத மணங்களை முகர்ந்து, அளவிலாச் சப்தங்களைக் கிரகித்து, கடும் சொற்களைப் பேசி மனத்தைச் சஞ்சலப்படுத்துகிறது. அது மட்டுமன்றி, ஆணவத்தால் மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் சொற்களையும் பிரயோகிக்கின்றன. இவை எல்லாவற்றையும் வயப்படுத்தி இந்த நோன்பு அனுஷ்டிக்கப்படுகிறது.

ஐயனைக் காண வேண்டுமாயின் தேக பலம், பாதபலம் மட்டுமன்றி மனோபலத்தையும் பெறவேண்டும். தேக ஆரோக்கியத்திற்குப் பிரம்மச்சரியம் இன்றியமையாதது. மேற்கூறியவற்றைச் செவ்வனே கடைப்பிடித்தால் ஐயன் பரிபூரண பலத்தையும் தந்திடுவான் என்பதில் ஐயமில்லை.

### துளசி மாலை எதற்காக அணிய வேண்டும்?

வீட்டில் துளசிச் செடியைப் பக்குவப்படுத்தி வளர்க்கிறோம். வசதி உள்ளவர்கள் வீட்டில் துளசி மாடத்தை அமைத்துப் பூஜிப்பார்கள். அதற்கு ஒரு தத்துவம் உண்டு. எம்மை ஈன்றெடுத்தவள் தாய். துளசி என்பது மகாலட்சுமியின் மறுவடிவமே. துளசித் தாய் இருக்குமிடத்து நாராயணன் முதல் சகல தேவர்களும் குடிகொண்டிருப்பார்கள். தீட்டுத் துடக்குகள் விலக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 19 ஆம் பக்கம்)

# ஐயப்ப வழிபாடும் சபரிமலை யாத்திரையும்

சபரிமலை யாத்திரை செல்ல நினைப்பவர்கள் முதலில் ஒரு குருஸ்வாமியிடம் சென்று அவர் அனுமதி பெற்று பின்னர் அவருடன் தான் யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்கள். குருஸ்வாமி தேவை தானா? தானாகவே ஒருவர் யாத்திரை மேற்கொள்ளக் கூடாதா?

குருவுடன் யாத்திரை மேற்கொள்வது கிடைத்தற்கரிய ஒரு பாக்கியமாகும். இந்த பாக்கியம் சபரிமலையாத்திரை மேற்கொள்ளும் ஒவ்வொரு ஐயப்ப பக்தருக்கும் கிடைக்கிறது.

கலையானாலும்சரி, கல்வியனாலும்சரி - குரு அவசியம். அதுவும் ஆன்மீக வழிக்கு குரு என்பவர் மிக மிக அவசியம். எமது இந்து மதத்தில் குருவிற்கு மேலான இடத்தை அளித்திருக்கிறார்கள். தாயும் தந்தையும் ஒருவருரை மனிதனாகப் படைக்கிறார்கள் குருவே அவரை மாமனிதனாக மாற்றுகிறார். தாயும் தந்தையும் ஒருவனுக்கு குருவைக் காட்டுகிறார்கள் குருவோ அவனுக்குக் கடவுளையே காட்டுகிறார். சபரிமலை யாத்திரை என்பது ஓர் ஆன்மீக யாத்திரை குருவின் துணைகொண்டு அதனை மேற்கொள்வதே சிறந்தது.

**சபரிமலை செல்பவர்கள் மாலை அணிந்து கொண்டு தான் செல்ல வேண்டுமா?**

எந்தவொரு காரியம் செய்வதற்கு முன்பும் சங்கல்பம் செய்து கொள்வது என்பது மிகவும் முக்கியம். மனிதிலே உறுதியான சங்கல்பம் இல்லாமல் செய்யும் எந்தக் காரியமும் முழுமையடைவதில்லை மலைக்கு போகுமுன் மாலை அணிந்து கொள்வது என்பது சீரிய முறையில் விரதம் இருந்து நல்ல முறையில் யாத்திரை மேற்கொண்டு. பகவானது மேலான தரிசனம் காண்பேன் என்று சங்கல்பம் செய்து கொண்டிருப்பதையே முத்திரை மாலை உணர்த்துகிறது.

**ஐயப்ப வழிபாட்டிற்கும் யாத்திரைக்கும் மார்கழி மாதத்தை ஏன் தேர்ந்தெடுக்கிறார்கள்....?**

மார்கழி மாதம் மிகவும் மேலான மாதம் "**மாதங்களில் நான் மார்கழி மாதமாக இருக்கின்றேன்.** என்று பகவான் ஸ்ரீகிருஸ்ணன் கூறுகிறார். மேலும் மார்கழி மாதம் தான் தேவர்களுக்கெல்லாம் பிரம்ம முகூர்த்தம். அதாவது விடியற்காலை நேரம் அந்த நேரத்தை நாம் இறைவழிபாட்டில் ஈடுபடுத்தினால் அது நமக்கு நல்ல முன்னேற்றத்தைத் தருகிறது. ஏன் ஆண்டாள் "திருப்பாவை" பாடியதும் மார்கழியில் தானே? மார்கழிக் குளிரில் குளிப்பதும் இரவு வெறுந்தரையில் படுப்பதும். உடல் பற்றைக்குறைக்கிறது. உடல் பற்றுக் குறையக் குறை. ◆ ஆன்மீக உணர்வு மேலெழுகிறது.



தேசோதயதீபம், தெய்வீக ஞானத்தமிழருவி, ஆன்மீகசுடர், கவிமாமணி, மகாகவிசாகரம், கலாரத்னா, வர்ணனைக் கலாநிதி (மதுரகவி காரை எம்.பி அருளானந்தன் J.P பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்)

**விரதம் இருப்பவர்கள் தீட்சை அதாவது தாடி வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றிருப்பது ஏன்?**

ஒருவன் தன்னையும் தன் உடலையும் மறக்க மறக்க இறைவனது நினைவு அதிகரிக்கிறது. தன்னையும் தன் அழகையும் துறந்து இறைவனையே நினைக்கும் போது இறைவனது அருள் அவனுக்குப் பரிபூரணமாகக் இடைக்கிறது. இறையருள் கிடைக்க தன்னை மறக்க வேண்டும் என்பதே உணர்த்துவது தீட்சை.

**பொதுவாக ஐயப்ப பக்தர்கள் பூஜை பஜனை என்ற பெயரில் கூச்சல் போடுவதாகப் பலர் நினைக்கிறார்கள் இப்படிப்பட்ட பஜனை தேவைதானா?**

பஜனை என்பது பகவானது நாமத்தை மனமுருகிப்பாடுவதாகும். கைகொட்டி, தாளம் போட்டு தன்னை மறந்து பக்தர்கள் பாடும்போது அவர்களது அகம்பாவம் போய் விடுகிறது.

அகம்பாவம் இல்லாத மனதில் இறைவன் வந்து அமர்கின்றான். மேலும் கைகொட்டிப் பஜனை செய்யும் பொழுது மரத்தின் மீதிருந்து பறந்து விடும் பறவைகளைப் போல நாம் செய்த பாவங்கள் நம்மை விட்டுப் பறந்து விடுகின்றன. மனமுருகிச் செய்யும் பஜனையை நாம் சங்கீர்த்தனத்தை வெறும் கூச்சல் என்று பரிகசிக்கக்கூடாது.

**"சுவாமியே .. சரணம் ஐயப்பா" என்று இழத்து உரக்கக் கூறுவது ஏன்?**

"சுவாமியே சரணம் ஐயப்பா என்று சாதாரணமாகவும் சொல்லலாம். ஆனால், இதற்கும் - அதனை இழுத்து உரக்கக் கூறுவதற்கும் நிறைய வேறுபாடு உண்டு. இழுத்து உரக்கக் கூறுவது சுவாசப் பயிற்சிக்கு ஒப்பாகிறது. இதனால் பிரணாயாமம் செய்வதால் கிடைக்கும் அதே பலன் கிடைக்கிது. அவ்விதம் கூறும் போது நம்மையும் அறியாமல் நம்மனம் பகவானின் பாதகமலத்தில் லயித்து விடுகிறது. இது அனுபவத்தால் பெறக்கூடிய இன்பம் வார்த்தைகளால் விளக்க முடியாது.

**மாலைதரித்த ஐயப்பமார்கள் மற்றவர்களை "ஐயப்பா" என்றும் "சுவாமி " என்றும் அழைப்பது ஏன்?**

விரதமிருக்கும் ஒவ்வொரு ஐயப்பமாரும் தாங்கள் காணும் எல்லாமே ஐயப்ப ஸ்வாமிதான் என்ற மன

நிலைக்கு உயர்த்தப்படுகிறார்கள் அவர் களையும் அறியாமல் இந்த மேலான மனநிலை அவர்களுக்கு வந்து விடுகிறது. இது கிடைத்தற்கரிய மிக உன்னதமான நிலை.

### இருமுடியின் தத்துவம் என்ன?

இருமுடியில் அதாவது முன்பகுதியில் சுவாமிக்கு வேண்டிய அபிஷேகப் பொருள்களும் நைவேத்தியப் பொருள்களும், பின்முடியில் பக்தனுக்கு அதாவது யாத்திரிகனுக்கு வேண்டிய பொருள்களும் கொண்டு செல்கிறோம். *சபரிமலையை நெருக்க நெருங்க பின்முடியில் உள்ள பொருள்களை வெகுவாக உபயோகிக்கப்பட்டு சந்நிதானம் அடையும்போது இருமுடியில் வெறும் முன்முடிப் பொருள்கள் தான் இருக்கும். அபிஷேகம் முடித்துத் திரும்பும் பொழுது இருமுடியில் பகவானது பிரசாதங்கள் மட்டுமே இருக்கும்.* பகவானை நெருக்க நெருங்க நமது பொருள்கள் என்பன குறைந்து முடிவில் அவனைத் தரிசித்துத் திரும்பும் பொழுது நமக்கென்று இருப் பது அவனது அருட்பிரசாதம் ஒன்றே என்பது தான் இரு முடியின் தத்துவமாகும்.

### இருமுடியில் நாம் கொண்டு போகும் நெய்த் தேங்காயின் தார்ப்பரியம் என்ன?

நாம் இங்கு நெய் நிரப்பிக் கொண்டு போகும் தேங்காயை சபரி மலையில் உடைத்துப் பிரித்துப் பார்க்கும் போது அது நன்கு உறைந்து பூரணம் போல் காட்சியளிக்கும். குருவானவர் நமது முக்கண்களில் ஒன்றான அகக்கண்ணைத் திறந்து அதன் மூலம் பக்தி என்ற நெய்யை நம் மனதில் நிரப்பி விடுகிறார். சிறிது காலத்திற்குப்பிறகு அதுவே பூரண ஞானமாக வெளிப்படுகின்றது இதுவே அதன் உட்கருத்து.

### இரு முடியை ஏன் தலையில் ஏந்திச் செல்ல வேண்டும்? தோளின் மீதோ, தோள் பையிலோ கொண்டு செல்லக் கூடாதா?

"எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் யாரையாவது போற்றினால்" ஏன் அவரை தலைமேல் வைத்துத்தாங்குகிறாய்? என்று கேட்பார்கள். தலை மீது தாங்குவது அவ்வளவு மேலான விஷயம். தலைமீது ஒரு பொருளைத் தாங்கி வருகிறோமென்றால், அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பது அர்த்தம். பரதன் ஸ்ரீராமனின் பாதுகையைத் தோளிலோ தோள்பையிலோ கொண்டு செல்லவில்லை. மாறாக தன் தலைமீது தான் சுமந்த நடந்து சென்றான் என்பதை ராமாயணத்தில் பார்க்கிறோம். ஆகையால், இருமுடியைத் தலைமீது ஏந்திச் செல்வது தான் கொருத்தமானது.

### சபரிமலைக்குச் செல்ல சிறிய பாதை இருக்கிறது அதை விட்டு விட்டு மிகவும் கஷ்டமான பெரிய பாதை வழியாகத்தான் செல்ல வேண்டுமா?

கடினமான பெரிய பாதையில் உள்ள கஷ்டங்களை நாம் பொருட்படுத்தாமல், ஐயனின் நாமம் ஒன்றையே மனதிற்கொண்டு செல்ல பூலோக சுவர்க்கமாம் சபரிமலை ஸ்ரீஐயப்பனின் சந்நிதியை அடைகிறோம் கரடு முரடான காட்டுப்பாதை என்பது நம்முடைய உலக வாழ்க்கையைக் குறிக்கிறது. கஷ்ட நஷ்டங்களோடு கூடிய இவ்வுலக வாழ்க்யின் துன்பங்களில் மனம் தளர்ந்து போகாமல் பகவானை அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு அவனது பெய ரையே உச்சரித்த வண்ணம் வாழ்கையை நடத்தும் ஒவ்வொரும் ஐயனது பாதக் கமலங்களையே சென்றடைவோம் என்பதை உணர்த்துகிறது.

### ஜோதியின் தத்துவம் என்ன?

கடவுளுக்கு உருவமும் உண்டு. அருவமும் உண்டு. சபரி மலையில் ஏகாந்தமாய் சின்முத்திரையுடன் கூடிய யோக வடிவில் உருவம் கொண்ட அதே மூர்த்தியே அருவமான ஜோதி வடிவமுமானவன் என்பதை உணர்த்துவதே ஜோதி. அந்த ஜோதியின் பிரகாசத்தினால் தான் சூரிய சந்திரர்கள் பிரகாசிக்கிறார்கள்.

### பதினெட்டாம் படியின் தத்துவம் என்ன?

ஐந்து இந்திரியங்கள் - அண்மையகோசம். எட்டு ராகங்களும் மூன்று குணங்களும் - பிராணமய, மனோமய கோசங்கள் வித்யா அவித்யா இவற்றைக் கடப்பது. விஞ்ஞானமய ஆனந்தமய கோசங்களைக் கடப்பது. எனவே, பதினெட்டு தத்துவங்களையும் கடந்தால் ஸ்ரீ ஐயப்பனைச் சென்று அடையலாம் என்பதே பொருள். மேலும் பதினெட்டுப் படி என்பது பதினெட்டு சித்தர்களையும், தேவதைகளையும் குறிப்பதாகவும் ஒரு ஐதீகமும் உண்டு. அவர்களுக்குச் செய்யும் பூஜையே படிப் பூஜையாகும்.




## மகர ஜோதி

இந்த மகரஜோதி என்பது ஜனவரி 14 ஆம் திகதி வானத்தில் தெரிவது. ஒவ்வொரு வருடமும் தமிழரின் தைப்பொங்கல் தினமாகவும் இது அமையும். சூரியன் மகரத்தில் பிரவேசிப்பதால் மகரம் ஒளிர்வதாக நம்பப்படுகிறது.

சபரிமலை ஐயப்பன் உற்சவத்தின் இறுதிநாளில் இந்த மகரஜோதி வானில் தோன்றுவதால், சபரிமலையில் நிற்கும் பக்தர்களுக்கு ஐயப்பன் மகர ஜோதியாக வானில் தோன்றி அருள் பாலிப்பதாக நம்புகின்றனர். சபரிமலைப் பக்தர்களுக்கு இது ஓர் அரிய தரிசனமாகக் கொள்ளப்படுகின்றது.

# எந்தத் திசையில் தலைவைத்துப் படுக்கவேண்டும்

இதுபற்றிச் சித்தர்கள் அன்றே தெளிவாகக் கூறியுள்ளனர்.

**உத்தமம் கிழக்கு**
**ஓங்குயிர் தெற்கு**
**மத்திமம் மேற்கு**
**மரணம் வடக்கு**

**கிழக்குத் திசையில் தலை வைத்துப்படுப்பது** மிகவும் நல்லது. **தெற்குத் திசையில் தலை வைத்துப்படுத்தால்** ஆயுள் வளரும். **மேற்குத் திசையில் தலைவைத்துப்படுத்தால்** கனவு, அதிர்ச்சி உண்டாகும். **வடக்குத் திசையில்** ஒருபோதும் தலை வைத்துத் தூங்கக்கூடாது. இதனை விஞ்ஞான ரீதியாகவும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

வடக்குத் திசையில் இருந்து வரும் காந்த சக்தி தலையில் மோதும்போது அங்குள்ள பிராண சக்தியை இழக்கும். இதனால் மூளை பாதிக்கப்படுவதுடன், இதயக் கோளாறுகள், நரம்புத்தளர்ச்சி உண்டாகும்.

மேலும் மல்லாந்து கால்களையும், கைகளையும் அகட்டி வைத்துக்கொண்டு தூங்கக் கூடாது. இதனால் இவர்களுக்குத் தேவையான ஒக்சிசன் (பிராண வாயு) உடலுக்குக் கிடைக்காமல் குறட்டை உண்டாகும்.

**குப்புறப்படுக்கக் கூடாது.** தூங்கவும் கூடாது. இடக்கை கீழாகவும், வலக்கை மேலாகவும் இருக்கும்படி கால்களை நீட்டி, இடது பக்கமாக ஒருக்களித்துப் படுத்துத் தூங்க வேண்டும். இதனால் வலது மூக்கில் சுவாசம் சூரியகலையில் ஓடும். இதில் எட்டு அங்குலம் மட்டுமே சுவாசம் வெளியே செல்வதால் நீண்ட ஆயுள் வளரும்.

மேலும், இதனால் உடலுக்குத் தேவையான வெப்பக்காற்று அதிகரித்து பித்த நிரை அதிகரிக்கச்செய்து, உண்ட உணவுகள் எளிதில் சீரணமாகும். இதயத்திற்குச் சீரான பிராணவாயு கிடைத்து இதயம் பலப்படும்.

வலது பக்கம் ஒருக்களித்து படுப்பதால் இடது பக்க மூக்கின் வழியாக சந்திரக்கலை சுவாசம் ஓடும். இதனால் பன்னிரெண்டு அங்குல சுவாசம் வெளியே செல்லும். இதனால் உடலில் குளிர்ச்சி உண்டாகும்.

இரவில் உண்ட உணவு சீரணமாகாமல் புளித் துப்போய் விஷமாக நேரிடும். சித்தர்கள் கூறி யது அனைத்துமே நம் அனைவரின் நன்மைக்கே. இதை நாமும் பின்பற்றி பயன் பெறுவோம்.

# மகர விளக்கு

மகரஜோதி வானில் தோன்றுவது. மகர விளக்கு சபரிமலையிலிருந்து நான்கு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பொன்னம்பலம் மலையில் தெரிவது. வானில் மகரஜோதி தெரியும்போதே மகர விளக்கும் எரிக்கப்படுகிறது.

இது மலைவாழ் மக்களால் வருடா வருடம் மேற்கொள்ளப்படும் ஒரு சமயச் சடங்காகும். இது விடயத்தில் பல சர்ச்சைகள் நீண்டகாலமாக இருந்தன. அந்த ஒளியாக் காட்சி தருபவர் ஐயப்பன் என்ற நம்பிக்கை பக்தர்களிடம் இருந்தபோதிலும் 2011 ஆம் ஆண்டு இந்த விடயம் சட்டபூர்வமாக ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

அதாவது மிக நீண்டகாலமாக மலைவாழ் மக்களால் பின் பற்றப்பட்டு வந்த இவ் விளக்கெரிக்கும் நிகழ்வானது தற்போது Travancore Devaswom Bord (TDB) என்ற அமைப்பினரால் தொடர்ந்தும் இவ்விளக்கினை ஏற்றி வருவதை நீதிமன்றில் ஒத்துக் கொண்டுள்ளனர்.

பொன்னம்பலம் மலைப்பகுதிக்குப் பக்தர்கள் யாரும் செல்லவிடாது, வனவளத் துறையினர் தடுத்து வருகின்றனர். மிக இரகசியமாக TDB அமைப்பினர் மேற்படி விளக்கேற்றும் சடங்கினை மேற்கொள்கின்றனர்.

நெய் மற்றும் பல பொருட்களைக்கொண்டு இச்சுடர் 03 தடவை ஏற்றப்படுகிறது. இதுவும் சபரிமலை யாத்திரையில் முக்கிய இடம்பெறுகிறது. என்பதையும் மறுப்பதற்கில்லை.



# ஐயப்பா சரணம் ஏன் வந்தது?

நெடுங்காலமாகத் தமிழ் நாட்டிலும், கேரளத்திலும் வழிபட்டு வந்த திராவிடப் பரதேவதைகளான மாசாத் தான், கண்டன் சாத்தா, சாத்தப்பன் முதலியவை சாஸ்தாவையே குறிப்பன. இந்தத் தேவதைகளின் வழிபாடு ஆரியப் பிராமணர்களின் சைவ வைணவக்கொள்கைகளாலும் கி.மு. 2 ஆம் நூற்றாண்டு முதல் பரவிய புத்த மதக் கோட்பாடுகளாலும் தழுவப்பெற்று மாற்றியமைக்கப் பெற்றன. புத்தமதத்திற்கே உரியதான சரணம் போடும் முறையும், (புத்தம் சரணம் கச்சாமி) கூட்டம் யாத்திரை செல்லுதலும், பகவான் பகவதி சரணம் விளித்தலும் புத்த மதத்திலிருந்து தழுவிக் கொள்ளப்பெற்ற வழக்கங்களாகும்.

# ஐயப்ப விரதத்தை எவ்வாறு கடைப்பிடிப்பது?



இந்த விரதத்தை உரிய முறையில் பின்பற்றாவிடில் அதற்கான பலன் கிடைக்காது. "நாங்கள் விரதத்தை அனுஸ்டித்தது போல தற்போதுள்ளவர்கள் அனுஷ்டிப்பதில்லை" என ஒரு மூத்த ஐயப்ப பக்தன் கூறினார். ஏன் அவ்வாறு கூறுகிறீர்கள்?

**- கறுப்பு உடைதானே தற்போது விரதம் இருப்பவர்களும் அணிகிறார்கள்.**
**- தாடி, தலைமயிர் வளர்க்கிறார்கள்.**
**- கோயிலுக்குப் போகிறார்கள்.**
**- பஜனை செய்கிறார்கள்**

இதைவிட என்ன செய்யவேண்டியிருக்கிறது என்று மீண்டும் அவரிடம் கேட்டபோது,

**"இந்த விரதம் இல்லறத்துக்குள் ஒரு துறவற வாழ்வை அனுபவிக்கக் கிடைத்த சந்தர்ப்பமாகும்"**

விரதம் இருக்கக்கூடிய மாரிகாலம், எல்லா இடமும் பச்சைப் பசேல் என்று மனதுக்கு ரம்மியமாக இருக்கும்.

ஐயப்ப சந்நிதானத்துக்கு யாத்திரை செய்யும் ஐயப்ப அடியார்கள் ஒரு மண்டலம் ( 41 நாட்கள்) விரதமிருக்கிறார்கள். இவர்கள் மேற்கொள்ளும் விரதங்களில் மிகவும் ஒழுங்குடன் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டியது - பிரம்மச்சரியம் ஆகும். மனம், வாக்கு , காயம் ஆகிய மூன்றினால் மனதை ஒருவழிப்படுத்தி, காமஇச்சையை அறவே நீக்கி, ஐயப்பனை மெய்யன்போடு வழிபட்டு, விரதம் அனுஷ்டித்தல் வேண்டும்.

**சங்கராந்தியன்று பிரகாசிக்கும் ஜோதியில் நம் மனமாசுகள் அகன்று, புனித ஆத்மாவாக புதுப் பிறவி எடுத்த தத்ததுவ மனிதராக, திரும்ப வேண்டும் என்ற குறிக்கோளுடனேயே விரதம் காத்து இலட்சக்கணக்கானோர் சபரிமலை செல்கின்றனர்.**

இந்த 41 நாட்களை வாழ்க்கையில் கிடைத்த ஒரு பேறாகக் கருதவேண்டும். 41 நாட்களும் கோயிலில் இருந்து இறைசிந்தனையுடன், முழு மனதுடன் தியானங்கள், பஜனைகள், யோகாசனம் எனப் பல விடயங்களில் ஈடுபடமுடியும்.

இக்காலத்தில் தொலைபேசி பாவிப்பதோ, ஐயப்பன் விடயத்தைத் தவிர வேறு விடயங்களைப் பேசுவதோ பாவமானது. பல கன்னிச் சாமியர் மாலை போட்டுள்ளார்கள். கறுப்பு நிற உடைகள் அணிந்திருக்கிறார்கள். உண்மைதான். ஆனால், அவர்கள் இந்தப் பிரமச்சரிய விரதத்தைக் கடைப்பிடிக்கும் மனநிலை அவர்களிடம் இல்லை. அதற்கு அவர்கள் பக்குவப்பட வேண்டும்.

வெறும் தரையில் படுத்து எழும்புவது, செருப்பு இல்லாமல் நடப்பது எனப் பழகுவது சபரிமலைக்குச் செல்லும்போது கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்க விதிகளைப் பின்பற்றுவதற்காகவே.

கல்லோ, முள்ளோ குற்றினால் ஐயப்பனின் சந்நிதானத்துக்குச் செல்கிறோம் என்பதால், **"கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை"** என்று குறிப்பிடப்படுகிறது.

தற்போது பல மாலை போட்ட சாமிகள் மோட்டார் சைக்கிள்களிலும், சொகுசு வாகனங்களிலும் பயணம் செய்துகொண்டு, கைத்தொலைபேசியில் எப்போதும் கதைத்துக்கொண்டு திரிவது, இந்தப் புனிதமான பிரமச்சரிய விரதத்தை இழிவு படுத்துவது மட்டுமல்லாது, ஐயப்பனின் தண்டனைக்கும் உள்ளாக வேண்டிய நிலை ஏற்படும்.

41 நாட்களும் வேறு உலகத்தில் இருப்பது போன்றதொரு சூழல் இருப்பது அவசியம். 41 நாட்களும் கோயில்களில் தங்குவது சாலச்சிறந்தது. அகத்தூய்மை, புறத்தூய்மை ஆகிய இரண்டையும் கடைப்பிடித்தால் இந்த விரதத்தில் அதிக பலனுண்டு....

**- குகன்**

# சிறு தெய்வங்கள் அல்லது காவல் தெய்வங்கள்

- சுடலைமாடன்
- ஐயனார்
- முனியப்பன்
- மதுரைவீரன்
- பச்சையம்மன்
- வீரபத்திரர்
- சின்னக்கறுப்பு
- பெரியகறுப்பு
- வீரன்
- அண்ணமார்
- காட்டேறி
- கறுப்புசாமி
- முனீஸ்வரன்
- நரசிம்மன்
- காளியம்மன்
- சங்கிலிக்கறுப்பன்
- வைரவன்
- காலவைரவன்
- பேச்சியம்மன்
- அழகர் சாமி



முனியப்பன்



மதுரைவீரன்



அழகர் சாமி





வைரவன்



நரசிம்மன்



பேச்சியம்மன்



கறுப்புசாமி

# கந்தபுராணத்தில்

## அரிகரசுதன் - மகாசாத்தா




விஸ்வப்பிரம்மஸ்ரீ
இ.அச்சுதபாகன்
ஆச்சாரியார்


சிவப்பரஞ் சுடரதும் அவரது ஆண்வடிவில் இருக்கும் சத்தியாகிய அரியினதும் (விண்டு) திருக்குமார வடிவமே அரிகரசுதன் ஐயனார் (ஐயப்பன்) என வடமொழிச் சிவபுராணங்கள் பத்திலும் சிறந்ததும் தமிழில் தோன்றிய புராணங்களில் "பராண நன்நாயகம்" என்று போற்றப்படுவதுமான கந்தபுராணம் வெகு விமரிசையாகக் கூறுகிறது.

ஆதிசிவனுடைய சக்தியான ஆதி பராசக்தி காரியவேறு பாட்டால் நால் வகைப்பட்டு நிற்கிறது. இதனைக் கந்தபுராணம் "நண்ணிய சக்தி நால்வகைப்பட்டது" என்கிறது. ஆகமத்தில் "போகேக பவானி புருஷேசம் விஷ்ணு சமரேக துர்க்கா குரோதேசே காளி" என்கிறது. இதன் தாற் பரியம் பரமேஸ்வரனுடைய சக்தி இறைவனோடு இணைந்து இல்லற தர்மத்தை நிலைநாட்டும்போது பவானி அல்லது பார்வதி என்று அழைக்கப்படுகிறாள்.

இவளே ஆண்வடிவில் இருந்து இறைவனின் காரியம் யாவினும் கைகொடுக்கும் போது விஷ்ணு எனப்படுகிறாள். அந்தப் பரதேவதை யுத்தத்தின்போது (மும்மலங்களைச் சங்கரிக்கும்போது) துர்க்கையாகவும் விளங்குகிறாள். துர்க்கை என வடமொழியில் சுட்டப்படும் தேவியையே தமிழர்கள் தொன்றுதொட்டு கொற்றவை, சண்டிகை, பத்திரகாளி என்று போற்றுகின்றனர். கோப சக்தியாக இருந்து அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டும்போது மகாகாளி, மகாமாரி, காலராத்திரி எனப்படுகிறாள்.

ஆகவே, அரியாகிய விண்டுவும் இறைவனின் ஓர் சக்தி எனக் கண்டோம். இதனை அப்பர் பெருமான் தேவாரத்தில்

"ஏரியலால் உருவமில்லை
ஏறல்லது ஏறவில்லை"
**கரியலால் போர்வை இல்லை
காண்டரு சோதியாற்கு அரியலால்
தேவியில்லை ஐயன் ஐயனாறார்க்கே" என்று கூறுகிறார்.**

மகாசாத்தா

கந்தபுராணம் - தச்சகாண்டம் - மகாசாத்தாப்படலம் பின்வருமாறு சிலாகித்துப் பேசுகிறது. முன்னொரு காலத்தில் தாருகாவனத்து முனிவர்கள் இறை நம்பிக்கை அற்றவர்களாக உலோகாயுத நெறி தாண்டவமாட இறுமாப்புற்றிருந்தனர். இவர்களின் செருக்கை அடக்க சிவன் ஆண் அழகனாக பிச்சா பாத்திரம் ஏந்தி பிச்சாடனராகவும் திருமால் மோகினியாக ஓர் பெண்ணழகியாகவும் தாருகாவனம் புகுந்தனர்.

முனிவர்களும் முன்பத்தினிகளும் தன்நிலை மறந்தனர். முனி பத்தினிகள் நிலைகண்டு வெகிண்டெழுந்த முனிவர்கள் அநேக ஆயுதங்களைச் சிவபெருமான் மீது ஏவினர். அவற்றையெல்லாம் அழித்து அவர்களின் அகம்பாவத்தைப் போக்கி ஞானம் கைவரச் செய்தார். உடற்பற்று, பொருட்பற்று, கல்விச் செருக்கு யாவற்றையும் நீக்கி தன்னலமற்ற முனிபுங்கவர்களாக மாற்றியருளினார்.

பின்னர் நாவலந்தீவிலே (பழந்தமிழகம்) நாவல் மரச்சோலையிலே இறைவன் சௌந்தரியத்தில் மையல் கொண்டு திருமால் அவரோடு இணைய சுந்தரவடிவுதாங்கி அரகரசுதன் அவதாரம் செய்தார். வெப்ப பொருள் குளிர்சக்தியுடன் இணைய மகனாக பொருட்சக்தி தோன்றியது.

ஐயனாரின் வாகனம் புலியாகும். அரிகரசுதனின் சக்திகள் பூரணை, புட்கலை எனவும் அவரது தளபதி வீரமகாளர் எனவும் கந்த புராம் கூறுகிறது. சிலப்பத்திகாரம் போன்ற நூல்களிலும் "சாத்தன்" வழிபாடு பற்றிப் பேசுகிறது.


இற்றைக்குப் பதினைந்தாயிரம் வருடாங்களுக்கு முன்பு நடைபெற்றதாகக் கூறப்படும் கந்தபுரான வரலாற்றின் பின் சில நூறு வருடாங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டிலுள்ள சேரநாட்டின் ஓர்பாகமும், இன்றைய கொஞ்சும் மலையாளக் கொடுந்தமிழ் பேசும் கேரளத்தின் பந்தளத்தில் பம்பையாற்றங்கரை யிலே அரிகரசுதரன் ஐயப்பன் பாலகனாக் கிடந்தார்.

பிள்ளைப்பேறில்லாது இருந்த மன்னர் இராசசேகரன் எடுத்து வளர்த்தார். அவரே மணிகண்டன் (ஐயப்பன்) அவரது மானிட வாழ்வில் உத்தம புத்திரராக வாழ்ந்தவர். தாய்ச் சமயமான சிவ - மால் நெறி வழி வந்தவராயினும் கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களிலும் மதிப்புக் கொண்டிருந்தார். தாய் நெறியைப் பின்பற்றுவோருக்கு மகள் நெறிகள் மீது எப்பாகுபாடும் இருக்க முடியாது என்பதை மானிட வடிவம் தாங்கிய ஐயப்பன் நிரூபித்தார்.

அப்பெருமானின் தியாக வாழ்வைக் கடைப்பிடித்து ஒழுகவும் அதி கரசுதன் ஐயன் ஐயப்பனின் அருள் பெறவும் அடியவர்கள் நளி (கார்த்திகை) மாதம் 1 ஆம் நாள் தொடக்கம் மகரமாதம் (தை) முதல்நாள் வரை விரதம் நோற்கின்றனர். போதை, மாமிச பாவனை தவிர்த்து ஒழுக்கநெறி பேணி, ஒரு வேளை உண்டு, (இரவில் பலகாரம்) விரதம் நோற்க வேண்டும். வெறும் வேடம் விரதமாகாது.

திருவண்ணாமலை திருக்கார்த்திகையில் பரமன் ஒளிவடிவாய் நின்றது போல், மகரமாதம் 1 ஆம் நாள் மகரவெளியாய் (மகரசோதி) ஐயன் ஐயப்பன் ஒளிர்கிறார்.

அரிகரசுதன் ஐயன் ஐயப்பன் புகழ் ஓங்குக.



# வாவர் பள்ளிவாசல்

இப் புனிதரின் சமாதி உள்ளது அதேவேளை வாவர் பள்ளிவாசல் எறும்லி என்ற இடத்தில் ஐயப்பன் கோவிலுக்கு அருகிலுள்ளது. ஐயப்ப யாத்திரிகர்கள் இப் பள்ளிவாசலிற்கு செல்வதென்பது கேரளாவில் காணப்படுகின்ற மத ரீதியான ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இவர் அராபியப் பகுதியில் இருந்து இஸ்லாம் மதத்தைப் பரப்புவதற்காக இந்தியாவிற்கு வந்தவர் என்று கூறப்படுகிறது. இன்னோர் செய்தியில் இவர் ஒரு போர் வீரர் எனவும் கடற் பயணத்தின் மூலம் கேரளப் பகுதிகளை கொள்ளையிட வந்தவர் எனவும் கூறப்படுகிறது.

இவரது இந்த முயற்சியை ஐயப்பன் முறியடித்ததாகவும் அதன் பின்னர் வாவர் ஐயப்பன் பக்தனாக மாறி மலைப்பிர தேசங்களில் இடம்பெற்ற பல யுத்தங்களில் ஐயப்பனுக்கு ஆதரவாக போர் புரிந்து மரணித்தவர் எனவும் கூறப்படுகிறது.

இவர் ஆரம்பத்தில் காட்டுச் சாமி என்று அழைக்கப்பட்டதாகவும் பின்னர் வாவர் சுவாமி என அறி யப்பட்டவர்.

வாவர் பள்ளியில் காணப்படும் கற்பொறிப்பு ஒன்றில் வாவர் சிறந்த போர் வீரன் என்பதை அறிய முடிகிறது. ஐயப்பன் பந்தள மன்னனை கேட்டுக்கொண்டதன் பேரில் கோட்டயம் மாவட்டத்தில் வாவர் பள்ளியை அமைத்ததாக கூறப்படுகிறது.

எறும்லி சபரிமலை செல்வதற்கான வாயிற்கதவு இப் பகுதியில் ஐயப்ப பக்தர்களால் ஆடப்படுகின்ற "பெத்தா துள்ளல்" என்ற பக்தி நடனத்திற்கு பிரபல்யமானது.

# ஐயப்பன் ஆபரணம் பூணுவது ஏன்?

சபரிமலையில் துறவு பூண்ட யோக நிலையில் ஐயப்பன் எழுந்தருளி இருக்கிறார். அப்படி இருந்தும் மகர விளக்கின்போது பந்தள மகா ராஜாவின் அரண்மனையிலிருந்து ஆபரணங்கள் வருவதும், அதை அணிந்து அவர் காட்சி தருவதும் சிறப்புப் பூஜை நிகழ்ச்சிகளாகும்.

துறவியான சுவாமி ஆபரணங்கள் பூண்டு காட்சி தருவது ஏன்? அதற்கு ஓர் அபூர்வ காரணம் உண்டு.

ஐயப்பன் அவதார நோக்கத்தின் நிமித்தம் பந்தள நாட்டைவிட்டு சபரிமலைக்குப் புறப்படும்போது எல்லோரிடமும் தனித்தனியாக விடைபெற்றுக்கொண்டு வந்தார். அவர்களுள் பந்தள நாட்டில் தமக்குக் குருவாக இருந்த குருவும் ஒருவர். அந்தக் குருவி டம் "சுவாமி உங்களுக்கு நான் குரு தட்சணையாக என்ன தரவேண்டும்?" என்று கேட்டார் ஐயப்பன்.

குரு நெகிழ்ந்துபோய், "பெருமானே எனக்கு இப்பிறவியில் தங்களை மாணக்கன் என்று கூறும்பேறே எனக்குக் குரு தட்சணை" என்றார். அவருடைய மனைவியோ ஊமையாகவும், குருடனாகவும் இருந்த தங்கள் குழந்தையை குணப்படுத்தித் தர வேண்டும் என்று வேண்டினார்.

குருபத்தினியின் கோரிக்கைப்படி அந்தக் குழந்தையின் பிணி நீங்கச் செய்தார். அப்பொழுது தம் முன் நிற்பது தெய்வம் என்ற உணர்வைக் கடந்து, நெகிழ்ந்து "ஐயனே! நீ தங்கமும், இரத்தினமும் ஜொலிக்க மகா ராஜானாக இருக்கவேண்டும்" என ஆசீர்வதித்தார். எல்லாவற்றையும் கடந்த சுவாமிக்கு ஏன் சுவர்ண இரத்தின ஆபரணங்கள் என்ற உணர்வு அந்தக் குருவுக்கு அப்பொழுது ஏன் தோன்ற வில்லை.

எனினும், குருவின் ஆசி தானே அது. பொய்த்துவிடக் கூடாதே என ஆண்டுக்கு ஒரு முறை மகர விளக்கு விழாவின்போது சுவாமி பந்தளராஜன் பரம்பரையினர் கொண்டுவரும் ஆயிரம் சவரனுக்கு மேற்பட்ட தங்க, இரத்தின ஆபரணங்களை அணிந்து காட்சி தருகிறார் ஸ்ரீ ஐயப்பன்.

முதல் ஐந்தும் ஐந்து இந்திரியங்களைக் குறிப்பது.

1. கண்கள்
2. காதுகள்
3. மூக்கு
4. நாக்கு
5. தோல்

அடுத்து வரும் 8 படிகளின் அர்த்தம் பின்வருமாறு

6. தத்துவம்
7. காமம்
8. குரோதம்
9. மோகம்
10. லோபம்
11. மதம்
12. மாச்சரியம்
13. அகங்காரம்

அடுத்துள்ள மூன்றும் குணங்களைக் குறிப்பது

14. சாத்விகக்குணம் (சாந்தம்)
15. ராஜத குணம் (செருக்கு)
16. தாமச குணம் (அறியாமை)
17. அவித்ய – குருவின் உதவி யுடன் அறிவைப் பெறுவது
18. நான் என்ற அகங்காரம் இருந்தால் ஐயப்பனை அடைய முடியாது என்ற நிலை இருப்பதால்தான் அதனைப் 18 படியாக உருவகித்துள்ளனர்.

வேறு சிலரின் விளக்கத்தின் பிரகாரம் பதினெண் புராணங்களைத்தான் இப்படிகள் அடையாளப்படுத்துவதாக குறிப்பிடுகின்றனர். ஆனால், வேறு சிலரோ ஐயப்பனிடம் காணப்படுகின்ற 18 வகை ஆயுதங்களையே *(வில், வாள், பரிசை, குந்தம், ஈட்டி, லதவாள், படிகம், முள்தடி, முசலம், கதை, அவகுசம், பரசு, பிண்டி, பாலம், வேல், பாசம், சக்கரம், மழு, கரிகை)* இப்படிகள் குறிப்பிடுவதாகவும் விளக்கமளிக்கின்றனர்.



ஐயப்பன் சிறுவனாக இருந்தபோது அவர் தவம் செய்வதற்காக 18 தேவர்கள் இணைந்து படிகளாக மாறினர் எனவும், தவம் இருக்கச் செல்லும் ஐயப்பன் மீண்டும் கீழே இறக்க முடியாதவாறு குத்துண்ட படிகளாக அவை அமைக்கப்பட்டதற்கு, அதுவே காரணம் எனவும் ஒரு கதையுண்டு.

# 18 புனித படிகளுக்கான அர்த்தம்

இரு முடி கட்டிக்கொண்டு 18 படிகளையும் தாண்டிச்செல்லும் ஒருவன் – தன்னை யாரென்று உணர்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட சகலவற்றையும் இது உணர்த்துகிறது. "நான் பிரம்மமாக இருக்கிறேன்" "அதுவாகவே இருக்கிறது" என்ற கோட்பாடே இங்கு முன்னிலைப்படுகிறது.

# யாத்திரை செல்ல முடியாத சில சந்தர்ப்பங்கள்


மிக நெருக்கமான உறவினர்கள் யாராவது இறந்தால். யாத்திரை செல்வது தவிர்க்கப்படல் வேண்டும் மரணச்சடங்கு முடிவடைந்த பின் சாதாரணமாக 13-16 நாட்களின் பின்பே வேறு விடயங்களில் இறங்க முடியும். ஆனால் ஒவ்வொரு சமூகத்தினருக்கும் இந்நாட்கள் வேறுபடுகிறது. சிலர் 41 நாட்கள் கழிந்த பின்னரே சில சடங்குகளை செய்வர். இவ்வாறான சூழலில் ஒரு யாத்திரிகர் பம்பா நதிக்கரையில் இடம் பெறுகின்ற பலிப் பூசையில் கலந்து கொள்ள முடியாது.

தற்போதுள்ள சூழலில் ஐயப்பனுக்கான 41 நாள் விரதத்தை தொடர்ச்சியாக மேற் கொள்வதற்கு பலருக்கு சந்தர்ப்பம் கிடைப்பதிலலை. பலர் தமது தொழில் நிமித்தம் வேறுபட்ட சூழ்நிலைகளில் வாழ்வதால் இவ் விரதத்தினை முறைப்படி பின்பற்றுவது சிரமமானது.

# தாளையடிக் கிழவா

ஐயனார் ஒரு காவல் தெய்வம். அந்த வகையில் சுன்னாகம் ஐய னார் கோவில் கதிரமலை சிவன் கே-ாவிலின் எல்லைத் தெய்வாமாகவும் காணப்படுகிறது. சுன்னாகம் ஐயன-ார் கோவில் மிகவும் பழமை யானது. தாளை மரங்கள் சூழ்ந்த பகுதியில் தான்தோன்றியாக ஐயனார் சிலை கிடைத்ததாகவும் மரபுக் கதைகள் கூறுகின்றன.

ஒரு காலை நீட்டியும் ஒரு காலை மடக்கியும் அமர்ந்திருக்கும் காட்சியே இங்குள்ள ஐயனார் மூல விக்கிரகமாகும் **பறையடித்து பூஜை**



**செய்து வேள்வி செய்யப்பட்ட கோவிலிது. தற்போது இக் கோவிலில் பறையுமில்லை வேள்வியுமில்லை.**

தற்போது வேள்வி நடை பெறா விட்டாலும் வருடாந்தம் நடை பெறும் திருவிழாவின் இறுதி நாட்க-ளில் பக்தர்கள் தமது நேர்த்திக்கு விட்ட ஆடு, கோழிகளை இக்கோவி லுக்கு சமர்ப்பித்த பின்னர் ஏலத்தில் விடப்படும் மரபு உண்டு.


ஐயனார் வீதியுலா வரும்போது பூரணை, புத்களை ஆகிய இரு மனைவிமார் சகிதம் காட்சி தருவது சுன்னாகம் ஐயனாரின் தோற்றப் பொலிவாகும்

முன்பொரு தடவை ஐயனார் கோவில் சூழலில் ஒருவர் கொல் லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார் கொல் லப்பட்டவர் இறக்கும் தருணத்தில் **"ஐயனார் உன்னைத் தண்டிப்-பார்"** என்று கூறிவிட்டு செத்திருக்கி ன்றார் அவரைக் கொன்றவர் அவர் கூறியதை அலட்சியம் செய்திருக்கி ன்றார்.


பின்னர் சந்தேக நபர் கைது செய்யப்பட்ட போதிலும் அக்கொலை தொடர்பில் சாட்சி சொல் வதற்கு யாரும் இருக்க வில்லை. அந்த வழக்கு கண்டி நீதிமன்றில் விசா ரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சாட்சிகள் எதுவுமில்லை யென்று கூறப்பட்டபோது ஒரு கிழவர் எழுந்து "நான் இருக்கிறேன்" என்று சாட்சி சொல்லியிருக்கி றார் சிறிது நேரத்தில் அவர் மறைந்திருக்கி-ன்றார்.

அது தாளையடி ஐயனார் என்பதும் இன்றும்கூட சில வய-தானவர்கள் சுன்னா-கம் ஐயனாரை வணங்கும் போது **"தாளையடிக்கிழவா" "கண்டி யில் சாட்சிசொன்ன ராசா"** என்று கௌரவமாக அழைப்பது மரபாக உள்ளது.

இந்த ஐயனார் கோவிலின் 1997காலப்பகுதியில் முதன்முறை யாக ஐயப்பன் மாலை போட்டு ஐயப்பன் பூஜையை ஆரம்பித்தார்கள். அதன் பின் இக்கே-ாவிலிருந்து கன்னிச் சாமிகளும் ஏனைய சாமிகளும் சபரி-மலைக்கு செல்லு கின்ற மரபும் பஜனை பாடுதல், வேட்டைத்-துள்ளல் நட னமாடு-தல் போன்ற பல விட யங்கள் பின்பற்றப் பட்டு வருகின்றன.



இளைய தலை முறையினருக்கு இக்கோயில் ஐயப்பன் கோயில் என்றே தெரியும். இது ஒரு பூர்வீ கமான ஐயனார் கோயில் என்ற விடயம் தெரிந்திருப்பதில்லை.



ஐயனார் வயதான தோற்றம் உடை யவர் அமர்ந்தவாறு ஒரு காலை நீட்டிக்கொண்டிருப்பவர். ஆனால் ஐயப்பனோ சிறுவனாக இரு கால்களையும் மடக்கி குந்தி இருப்ப-தாகவும் இரு கால்களையும் ஒரு பட்டியால் கட்டப்படடிருப்பதையும் காணலாம்.

திருமணமாகாது பிரம்மச்சாரி யாக இருக்கும் ஐயப்பன் இரு மனைவியருடன் தோற்றமளிப்ப-தில்லை என்பது பலருக்குத் தெரி யாது.

சுன்னாகம் ஐயனார் கொயி லில் ஐயனார் வழிபாடும், ஐயப்பன் வழி-பாடும் ஒன்றாக பின்பற்றப்பட்டு வருகிறது.

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்)

# இரு முடி கட்டுதல்



சபரி மலை யாத்திரை செல்லும் போது எத்தகைய பொருட்களை எடுத்துச்சென்றால் அந்த யாத்திரைக்கான பலனை முழுமையாகப் பெற முடியுமென வரையறுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி ஒவ்வொரு யாத்திரிகரும் தெரிந்திருப்பது அவசியம்.

இரு முடிச்சுக்களைக் கொண்ட பொதியாக இது இருப்பதால் இரு முடியென அழைக்கின்றனர் இன்னோர் வகையில் கூறுவதானால் சபரிமலை யாத்திரையர்களின் பயணப்பொதி எனலாம். இதன் மூலம் 41 நாட்கள் கடைப்பிடித்த விரதத்தின் பிரதி பலனை அவதானிக்க முடியும்.

41 நாள் விரதமிருந்து இரு முடி கட்டி 18 படிகள் ஏறி ஐயப்பனை வணங்குவதற்குரிய இடத்திற்கு செல்பவர்களுக்கே இந்த இருமுடிகட்டு தேவைப்படுகிறது. அவ்வாறல்லாத ஐயப்பன் வணக்கத்திற்காக பக்க வாட்டிலுள்ள வழியால் செல்பவர்களுக்கு இரு முடிகட்டு தேவையில்லை அவ்வாறனவர்கள் அந்த வழியால் இரு முடி கட்டை கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது. இரு முடிக்கான பையினை கைத்தெறி நெசவு மூலம் பருத்தி நூலால் நெய்யப்பட்ட துணியால் தயாரிக்கப்படுகிறது. இது இரு பகுதிகளை கொண்ட உறையாகும். இரு பைகளையும் இணைக்கும் சிறிய துணியொன்று நடுவில் பொருத்தப்படடிருக்கும்.

இந்தப்பைகளின் நிறம், கறுப்பு, கருநீலம், காவி, வர்ணம், சிவப்பு வெள்ளை என அமையும். இதன் இரு பைகளும் முன்முடி, பின் முடி என அழைக்கப்படுகிறது. முன் முடியில் ஐயப்பன் பூஜைக்குத் தேவையான பொருட்களும் பின்முடியில் யாத்திரிகரின் தனிப்பட்ட தேவைக்கான பொருட்களும் காணப்படும்.

# இரு முடி கட்டிச்செல்வதன் நோக்கம்




தேங்காய்கள் என்பது விரதத்தை உறுதிப்படுத்தும் முத்திரையாக உள்ளது. யாத்திரையர்களை சுட்டுவதால் இது "விரத முத்திரை எனப்படுகிறது" தேங்காயின் சூழவுள்ள பொச்சுக்களை நீக்கி துப்பரவு செய்து வெறும் தேங்காயாக எடுப்பது ஐயப்பனுக்காக எம்மை சூழவுள்ள தேவையற்ற விடங்களை துறந்ததன் அடையாளமாக கட்டப்படுகிறது.

சுத்தமான தேங்காய் என்பது யாத்திரிகரின் சுத்தமான உடலைப்பிரதி பலிக்கிறது. தேங்காயின் கண்களைத்தோண்டி இளநீரை வெளியேற்றுவதன் மூலம் இரு யாத்திரிகரின் உள் உடல் சுத்தமடைவதாக அர்த்தம் கொள்ளப்படுகிறது. அதாவது தேங்காய் வெறுமை அடைந்தது போல மனம் தூய்மை அடைகிறது.

இதன் மூலம் யாத்திரிகனாக இருப்பதற்குரிய தகுதியை ஒருவன் பெறுகிறான். இளநீர் எடுத்த தேங்காய்க்குள் சுத்தமான நெய்யை விட்டு நிரப்பி அபிசேகத்திற்கு தயார் செய்கின்றனர். இது ஐயப்பனுக்கான புனித நீராட்டாகும். சுத்தமாக நெய் நிரப்புவதென்பது ஒரு யாத்திரிகன் தூய எண்ணங்களால் தனது மனதை நிரப்புவதற்கு ஒப்பானதாகும்.

நெய் நிரப்பப்பட்ட சுத்தமான தேங்காய் என்பது சுத்தமாக்கப்பட்ட அல்லது துப்பரவான பக்தனை அடையாளப்படுத்துகிறது. தூய மேலான எண்ணங்களுடைய ஒருவனால் மட்டுமே ஐயப்பனை அணுக முடியும். சாதாரண வாழ்வில் உள்ள ஒருவன் இறைவனை அடைவதென்பது மரணத்தின் பின்பும் மகிழ்ச்சியை தருவதாகும்.

## லாகி லாகி

லாகி லாகி லாகி லாகி இல்லல்லோ
வார் முகமது பேரெல்லோ
எரிமேனி நாங்கள் வந்தல்லோ
கரும் புள்ளி செம்புள்ளி இட்டல்லோ
(லாகி... லாகி...)

மணிமண்டன் நண்பர் ஆனவரே
மாமலை மாமணி யானவரே
அஞ்சா நெஞ்சம் கொண்டவரே
அல்லாவின் இறையடி சென்றவரே
(லாகி... லாகி...)

எதிர்த்தவர் யாரையும் வென்றவரே
இல்லாதவர்க்கு தந்தவரே
இஞ்சிப்பாறையில் தந்தவரே
எரிமேலியில் குடி கொண்டவரே
(லாகி... லாகி...)

வீரமும் தீரமும் கொண்டவரே
எருமேலி கோட்டை ஆண்டவரே
முன்னும் பின்னும் துணைவருவீரே
கன்னிமார்களை காத்திடுவீர்
(லாகி... லாகி...)

உன்னிடம் நாங்கள் வந்திடுவோம்
பேட்டையாடி துள்ளிடுவோம்
வாவருசாமி திந்தகத்தோம்
ஐயப்பசாமி திந்தகத்தோம்
(லாகி... லாகி...)

# 10– 50 வயதுப் பிரிவுப் பெண்கள் சபரிமலைக்கு செல்லமுடியாது!



இதற்கான விளக்கத்தினை ரவன் கோட் டெவாஸ்வோம் சபையினர் (TDV) 10 தொடக்கம் 50 வயதுக்கு இடைப்பட்ட வயதுள்ள பெண்களை சபரி மலைக்கு அனுமதிப்பதால் பிரச்சினை ஏற்படுவதாக குறிப்பிடப் படுகிறது.

ஐயப்ப விரதம் என்பது முற்றுமுழு-தாக பிரமச்சரிய விரதமாக இருப்ப-தால் அதற்குள் இவ்வயதுப் பிரிவினர் அனுமதிக்கப்பட்டால் இவ்விரதத்தில் இடையூறுகள் ஏற்பட்டுவிடும்.

இவ்விரதம் தொடர்ந்து 41 நாள் பின்பற்றப்படுவதால், பெண்கள் தமது மாதவிடாய்க் காலத்திற்கு இயற்கை யாக உட்படுவதால் 41 நாள் விரதத்தை தொடர்ச்சியாகப் பின்பற்றச் சந்தர்ப்பம் இருக்காது.

ஒவ்வொரு மதத்தையும் வணங்குவதற்கு அந்தந்த மதங்கள் பின்பற்றுகின்ற மக்களுக்கு என்று சில ஒழுக்க நடைமுறைகளும், ஒழுக்க விழுமியங்களும் இருப்பது இயல்பே.

மனச்சுத்தம் என்ற விடயத்துக்கு இவ்விரதத்தில் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. தாந்திரிகள் என அழைக்கப்படும் மதத் தலைவர் மட்டுமே கோயில் நடைமுறைகளைத் தீர்மானிக்க முடியும்.

பெண்களை வணங்க வரக்கூடாது என்ற நிபந்தனையை யார் முன்வைத்தார் என்ற கேள்விக்கான பதில், ஐயப்பன் என்பதாகும். இதனால் மேற்கொண்டு விவாதிக்கும் வாய்ப்பு இல்லாது போகிறது.

---

# இலங்கையில் ஐயனார் வழிபாடு மறைந்து வருகிறது.



இலங்கையில் பல பாகங்களிலும் பரிவாரத் தெய்வம் அல்லது காவற் தெய்வங்களுள் ஒன்றாக தொன்று தொட்டு வணங்கப்பட்டு வந்த ஐயனார் என்ற கடவுள், பிற்பட்ட நாட்களில் ஐயப்பன் வழிபாடாக சபரிமலை வணக்க முறையாக மாற்றப்பட்டு விட்டது.

மக்களுக்கும் ஐயனார், ஐயப்பன் ஆகிய இரு தெய்வங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் பற்றி தெளிவில்லை. மாலை அணிதல், கறுப்பு உடை தரித்தல், இருமுடி கட்டி சபரிமலை செல்லுதல் எல்லாமே ஐயப்பன் வழிபாடாகும்.



# ஐயப்பன் வரலாறு

ஐயப்பன் அருள் பல அருள்பவன். புலியை வாகனமாகக் கொண்டவன். தவக் கோலத்தில் சபரிமலையில் அமர்ந்து அருள் பாலித்துவரும் அருட் கடல் மகிஷி என்ற அரக்கியை வதம் செய்ய அவதரித்தவன் ஐயப்பன் வரலாறு பற்றிக் கூறப்படுவதாவது,

கேரளாவில் பந்தள மகாராஜா குழந்தையில்லாமல் மனம் வருந்து வந்தார். அந்தச் சமயத்தில் மகிஷி என்ற அரக்கி ரிஷிகளைத் துன்புறுத்தி வந்தாள். அவர்களுக்கு உதவ சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பிறந்தவர்தான் ஐயப்பன்.

விஷ்ணு மோகினியாக மாற, சிவனுக்கும் மோகினிக்கும் (விஷ்ணு-வுக்கும் ஐயப்பன் பிறந்தார். குழந்தையாகப் பிறந்து ஐயப்பனை மரத்-திற்கு அடியில் விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர் ஹரியம், விஷ்ணுவம். தெய்வ செயல்கள் அனைத்திற்குமே ஒரு காரணம் உண்டல்லவா.

பக்திமானான பந்தள மகாராஜாவின் பிள்ளையில்லாக் குறையைத் தீர்க்கவே பரந்தாமனும், பரம்பொருளும் குழந்தையை அங்கே விட்டுச் சென்றனர். வேட்டைக்கு வந்த பந்தள மன்னன் குழந்தையின் அழு-குரல் கேட்டான். எங்கு குழந்தை அழுகிறது என பதைபதைத்து தேடி மரத்தடியில் ஜொலிக்கும் தேஜசுடன் குழந்தை ஐயப்பனைக் கண்டான். ஆண்டவா! என் குழந்தையில்லாக் குறை தீர்க்கவே இந்த குழந்தை இங்கு இருக்கிறதா என மகிழ்ந்து அந்தக் குழந்தையை அரண்மனைக்குக் கொண்டு சென்றான். அரசியும் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தாள். இருவரும் இறைவனுக்கு நன்றி செலுத்தினர்.

குழந்தையைக் கண்ட அனைவரும் சொக்கிப் போனார்கள். ஜோதிடர்கள் இந்தக் குழந்தை தெய்வாம்சம் பொருந்திய குழந்தை எனக் கூறினர். கழுத்தில் மணியுடன் பிறந்ததால், குழந்தைதக்கு மணிகண்டன் என்று பெயரிட்டு அன்போடு பாராட்டிச் சீராட்டி வளர்த்து வந்தனர். இந்த நிலையில் மகாராணிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அரசனும், அரசியும் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. மணிகண்டன் வந்த நேரம்நமக்கும் குழந்தை பிறந்தது என ஆனந்தம் அடைந்தனர்.

ஆனால் எங்குமே நல் மனதைக் கெடுக்கும் புல்லுருவிகள் இருக்குமல்லவா? ஐயப்பன் உங்களுக்குப் பிறந்த மகன் அல்ல. ஆனால் அவனையே தலைப்பிள்ளைபோல் சிராட்டி வளர்க்கின்றீர்கள். அதனால் அடுத்த மன்னனாக அவன் வரவே வாய்ப்பிருக்கிறது. உங்களுக்குப் பிறந்த குழந்தையிருக்க வேறு யாரை எப்படி அரசனாக்குவது என அரசியின் மனதில் நஞ்சைக் கலந்தனர்.

சிலர் தீயபோதனைகளால் அரசியும் மனம் மாறினாள். தான் வயிற்றுவலியால் அவதிப்படுவதாக



பொய்யுரைத்தாள். அரசவை வைத்-தியரைப் புலிப்பால் குடித்தால் மட்டுமே தன் வயிற்று வலி தீரும் எனக் கூற வைத்தாள். ஐயப்பன் அறிய மாட்டா-னா உண்மையை. தாய்க்கு புலிப்பால் கொண்டு வர காடு நோக்கிப் புறப்பட்டான்.

வழியில் அரக்கி மகிஷி ஐயப்பனைத் தடுத்தாள். வில்லெடுத்தான் வில்லாளி வீரன் வதம் செய்தான். மகிஷியை அவன் அவதார மகிமை பூர்த்தி பெற்றது.

தேவர்கள் பூமாரி பொழிந்-தனர். இந்திரனே புலியாக மாற, மற்ற தேவர்கள் புலியால் புடைசூழ புலிமேல் ஏறி நாடு சென்றான் ஐயப்பன். புலி மேல் வந்த மணிகண்டனைக் கண்டு பதறிப் போனாள் அரச. தான் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டு புலி-களைத் திருப்பி அனுப்புமாறு வேண்டி-னாள். ஐயப்பனும் அவ்வாறே செய்து அருளினார்.

மேலும் தன் அவதார காரணம் பூர்த்தி பெற்றதால் தான் சபரிமலையில் தவமிருக்கப் போவதாகவும் தன்னைத் தரிசிக்க வேண்டுமானால் அங்கு வருமாறும் கூறி சபரி மலையில் 18 படிகளுக்க மேல் தவக் கோலத்-தில் அமர்ந்தார். அருள் தரும் ஐயப்பன்.


இன்னும் நாம் ஐயப்பனை அங்கு அந்த தவக்கோலத்தில் காணலாம். ஐயப்பனின் இரு கால்களில் துண்டு கட்டியிருக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதற்கு ஒரு காரணம் கூறப்படுகிறது. ஐயப்பனைக் காண பந்தள மகாராஜா ஒருமுறை வந்தபோது ஐயப்பன் தன் தந்தை என்ற காரணத்தால் எழ முயன்ற போது இறைவன் தனக்கு மரியாதை செய்ய எழுந்திருக்கக்கூடாது என்பதற்காக தன் தோளில் போட்டிருந்த பட்டு அங்கவஸ்திரத்தை ஐயப்பனை நோக்கி அவர் தூக்கி போட்ட போது அந்த அங்கவஸ்திரம் ஐயப்பன் காலைச் சுற்றிக் கொண்டதாகவும் கூறப்படுகி-றது.

## முக்கிய விரத முறைகள்

ஐயப்ப பக்தர்கள் முக்கியமாக அனுஷ்டிக்க வேண்டிய விரதம் பிரம் மசர்யம், காலை - மாலை குளித்து சுவாமி படம் அல்லது ஆலயத்தில் சுவாமி முன் தவறாமல் சரணம் கூப் பிடுதல், சுத்தமான உணவையே உட்கொள்ளுதல், எப்பொழுதும் ஐயப் பன் நினைவாகவே இருத்தல். ஸத்வ குணத்தையே வளர்த்தல் இவையா-கும். மற்றவர்கள் செய்யும் பூஜைக-ளில் கலந்து கொள்வதும் மிக நல லைத் தரும். மற்றவர்களிடம் உ-ரையாடத்தொடங்குமுன்ஸ்வாமிசரணம் என்று கூறிப் பேசுதல் வேண்டும். எல் லோரிடமும் எப்பொழுதும் மரியாதை யாகவும் அன்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.

# இருமுடி கட்டுவதற்கு வேண்டிய பொருட்கள்

**1) முன் முடிக்குத் தேவையானவை**



1. மஞ்சள்
2. மஞ்சள் பொடி 100 கிராம்
3. குங்குமம் 200 கிராம்
4. விபூதி பக்கெட் 2
5. ஊதுபத்திப க்கெட்

6. பன்னீர்கேபாத்தல்
7. சாம்பிராணி
8. கற்பூரம்
9. வெற்றிலை பாக்கு
10. எலுமிச்சம் பழம்
11. பச்சரிசி - ஒரு கிலோ கிராம்
12. பாசிப்பயறு 1/4 கிலோ கிராம்
13. வெல்லம்
14. ஏலம்


15. கற்கண்டு 100 கிராம்
16. முந்திரிப்பருப்பு
17. திராட்சை 100 கிராம்
18. நெற் பொரி 200 கிராம்
19. பசு நெய்
20.அப்பள மாவு
21.முற்றிய தேங்காய் 5
22.விடலைத்தேங்காய் 5
23.நூற் கயிறு
24.சிவப்புத்துண்டு 25சென்ரி மீற்றர்
25. கறுப்புத்துண்டு 25சென்ரி மீற்றர்
26. திரிநூல்
27.காணிக்கை (50 காசு)
28. இருமுடிப்பை (36X18)
29.சிறிய பைகள் 10

**2) பின்முடிக்குத் தேவையானவை**

1. மஞ்சள் பொடி 100 கிராம்
2. அரிசி 2 - கிலோ கிராம்
3. துவரம்புரப்பு 4 1/2 கிலோ கிராம்
4. புளி 150 கிராம்
5. சாம்பார் பொடி 200 கிராம்
6. கஞ்சிரவை - 1/2 கிலோ கிராம்
7. பாசிப்பருப்பு - 1/2 கிலோ கிராம்
8. கடலைப்பருப்பு - 1/2 கிலோ கிராம்
9. சீரகம் மிளகு கடுகு மிளகாய் வற்றல்
10. உழுத்தம் பருப்பு - 1/4 கிலோ கிராம்
11. காப்பி தூள் - 1/4 கிலோ கிராம்
12. தேயிலைத்தூள் 100 கிராம்
13. பெருங்காயம்
14. ஒரு வாரத்திற்கு கெட்டுப்போகாத உருளை கரட், நூட்கோஸ், பீட்ரூட் , சேனை கருணை போன்ற காய்கறிகள்
15. அப்பளம் - 25
16. நல்லெண்ணெய்
17. உப்பு
18. சர்க்கரை - 1/2 கிலோ கிராம்
19. தேங்காய் 5
20. நாட்டுச்சர்க்கரை - 1/4 கிலோ கிராம்
21. சத்துமா 1 கிலோ கிராம்
22. ஊறுகாய்
23. தின்பண்டங்கள்
24. அவல் 2 கிலோ கிராம்
25. ரவை

**3) தோளில் மாட்டிக்கொள்ளும் பையில் வைக்கும் பொருட்கள்**

1. வேஷ்டி சட்டை துண்டு
2. சலவைச்சோப்பு
3. பற்பொடி
4. கம்பளிச்சட்டை கம்பளிப்போர்வை
5. தண்ணீர்ப்போத்தல்
6. டோச் லைட்
7. சிறிய கத்தி அரிவாள்
8. சிறிய சமையல்
9. டம்ளர் பாத்திரங்கள்
10. மெழுகுவர்த்தி
11. தீப்பெட்டி
12. மழையிலிருந்து காத்துக்கொள்ளும் பிளாஸ்திக் பேப்பர்




சபரி மலை பக்தர்கள் வாவர் சுவாமியை வணங்கச் செல்லும் காலத்தில் கேரளாவில் நடாத்தப்படுகின்ற படகுப் போட்டிகள் பிரசித்தமானவை.



வாவர் பள்ளியில் சபரிமலை பக்தர்கள்...

# சபரிமலை செல்வோர் கடைப்பிடிக்கவேண்டிய விரத விதிமுறைகள்



**1.** சபரிமலை யாத்திரைக்குச் செல்லவிரும்பும் பக்தர்கள் கார்த்திகை முதல்நாள் மாலை அணிவது சிறந்தது .அன்று சபரிமலை சந்நிதானம் திறப்பதால், நாள், கிழமை பார்க்கவேண்டிய அவசியமில்லை. அல்லாவிடில், அதற்கு அடுத்த ஒரு நல்ல நாளில் சங்கராந்திக்கு 41 நாட்களுக்கு முன் மாலை அணியவேண்டும்.

**2.** குறைந்தது ஆறு அல்லது ஏழு முறை சபரிமலை யாத்திரை மேற்கொண்டவராகவும், பக்தி வழியைப் பின்பற்றுபவராகவும், ஐயப்பனின் அவதாரத் தத்துவங்களை அறிந்தவராகவும், பொறுமைக்குணமும், பொறுப்புணர்ச்சி உடையவராகவும் உள்ள ஒருவரை குருசுவாமியாக ஏற்றுக்கொள்ளவேண்டும். திருக்கோவிலிலோ, அல்லது வீட்டில் திருவிளக்கின் முன்பாகவோ குருசுவாமியை வணங்கி, அவர் கையால் மாலை அணியவேண்டும். மாலை அணிந்த பின்பு குரு சாமிக்கு இயன்றளவு காணிக்கை செலுத்தி ஆசி பெறவேண்டும்.

**3.** உருத்திராட்சம் அல்லது துளசி மாலை 54 அல்லது 108 மணிகள் உடையதாக வாங்கி, அதில் ஐயப்பன் திருவுருவம் பொறித்த பதக்கத்தை அணிதல் வேண்டும். துணை மாலையொன்றை சேர்த்து அணிவது நல்லது.

**4.** விரத காலத்தில் பச்சை, காவி, கறுப்பு, மஞ்சள், நீலம் ஆகிய ஏதாவது ஒரு வர்ணத்தில் ஆடை அணிதல் வேண்டும். தமது அலுவல் காரணமாக வேறு ஆடை அணியவேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள் பூஜைகள், மற்றும் யாத்திரையின்போது அவசியம் வர்ண ஆடை அணியவேண்டும்.




**5.** நாள்தோறும் விடியற்காலையில் குளிர்ந்த நீரில் குளிக்கவேண்டும். தனியாகவோ, கூட்டாகவோ பூஜைகள் நடத்தலாம். அது இயலாவிட்டால் ஆலயங்களுக்குச் செல்வதோடு, பிறர் நடத்தும் பூஜைகளிலும் கலந்து கொள்ள வேண்டும் .மலையில் சூரியன் மறைந்த பின் குளிர்ந்த நீரில் குளிக்கவேண்டும். காலை, மாலை இரு வேளைகளிலும் நிராடிய பின் 108 சரணங்கள் சொல்லி, துளசி, கற்கண்டு, பால் ஆகியவற்றில் ஒன்றை ஐயப்பனுக்கு நிவேதனம் செய்து வணங்கவேண்டும்.

**6.** விரத காலத்தில் பிரம்மச்சரிய விரதத்தைத் தவறாமல் கடைபிடிக்கவேண்டும். மனம், மொழி, செயல் மூன்றிலும் காம வேட்கை தோன்றாமல் காக்கவேண்டும்.

**7.** விரத காலத்தில் முடி வெட்டுதல், முகச்சவரம் செய்தல் கூடாது. குடை, காலணிகளைப் பயன்படுத்தக்கூடாது. மது அருந்துதல், புகை பிடித்தல், பொய் பேசுதல், பிறருக்கு துன்பம் தருதல், சினம் கொள்ளல், புலால் உண்ணுதல் ஆகியவற்றை அடியோடு விலக்கல்.

**8.** விரதகாலத்தில்எவருடம்பேசநேர்ந்தாலும் **"சுவாமி சரணம்"** என்றசொற்களுடன்பேசத்தொடங்கவேண்டும். பேச்சை முடித்து விடைபெறும்போதும் **"சுவாமியே சரணம்"** என்று கூறவேண்டும்.

**9.** அன்றாடம் மதியம் ஒருவேளைதான் உணவு உண்ணவேண்டும். மாலையில் ஐயப்பனை வழிபட்டபிறகு பலகாரங்களை அல்லது பால், பழம் மட்டுமே உண்ணல் வேண்டும்.



**10.** மாலை அணிந்துகொண்ட பின் எக்காரணத்தைக் கொண்டும் அதனைக் கழற்றக்கூடாது. மாலை பழுதடைந்தாலோ, அறுந்துபோல் தெரிந்தாலோ வேறுமாலையைப் போட்டுக்கொண்டு பழுதடைந்ததைக் கழற்றவேண்டும்.

**11.** நெருங்கிய உறவினரின் இறப்பால் தீட்டு நேர்ந்தால், குலதெய்வத்தைப் பிரார்த்தித்துக்கொண்டு குருசாமி மூலமாக மாலையைக் கழற்றி, ஐயப்பன் படத்தில் மாட்டிவிடவேண்டும்.

பின்னர் மறுவருடம் தான் மலைக்குச் செல்லலாம்.


ஆபரணப் பெட்டி

**12.** விரதகாலத்தில் பகலில் தூங்குவதைத் தவிர்க்க வேண்டும். இரவில் பாய், படுக்கை, தலையணை முதலியவற்றைப் பயன்படுத்தாமல், ஒரு துணியை விரித்து அதில் படுத்துறங்க வேண்டும்.

**13.** மாலை அணிந்தபின் சந்திக்கும் ஆண்களை **"ஐயப்பா"** என்றும் பெண்களை **"மாளிகைப்புறம்"** என்றும், சிறுவர்களை **"மணிகண்டன்"** என்றும் சிறுமி-களை **"கொச்சி"** என்றும் அழைக்கவேண்டும்.

**14.** மாதவிலக்கான பெண்களைப் பார்ப்பதும், அவர்கள் தயாரிக்கம் உணவை உட்கொள்வதும் கூடாது. மாதவிலக்கான பெண்களை அறியாமல் பார்க்க நேரிட்டால் நீராடி ஐயப்பனை வணங்கவேண்டும்.

**15.** மலைக்கு யாத்திரை புறப்படுவதற்கு சில நாட்களுக்கு முன் விரிவான முறையில் பஜனை, கூட்டு வழிபாடு, பூஜை முதலியன நடத்தி, ஐயப்ப பக்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரசாதம் வழங்கி உணவு அளிக்கவேண்டும்.

**16.** இருமுடிக்கட்டு பூஜையைத் தன் வீட்டிலோ, குரு சாமி வீட்டிலோ அல்லது கோவிலிலோ நடத்தவேண்டும். முதலில் கணபதி பூஜை நடத்தி, ஐயப்பன் பூஜை செய்து, பெற்றோர்களை வணங்கி ,குரு சாமியை வணங்கி ஐயப்பன் நாமங்களைச் சொல்லிக்கொண்டே கட்டு நிறைக்க வேண்டும்.

**17.** யாத்திரை புறப்படும்போது, ஐயப்பன்மார் போய்வருகிறேன் என்றோ, தன்னுடன் வரும் ஐயப்பன்மார்களை வசதியாக அழைத்துச் செல்வதாகவோ, தன்னுடன் தைரியமாக வரலாம் என்றோ கூறக்கூடாது.



**18.** யாத்திரை புறப்படும்போது இருமுடியைத் தலையில் தாங்கி, வீட்டு வாயிலில் வந்து பகவானைப் பிரார்த்தித்து, தேங்காய் உடைத்து, சரணம் சொல்லிக்கொண்டு திரும்பிப்பார்க்காமல் நடந்து செல்லவேண்டும்.

**19.** கன்னி ஐயப்பன்மார்கள் யாத்திரை புறப்பட்டதிலிருந்து சந்நிதானம் அடையும் வரை ஒருபோதும் இருமுடியைத் தமது தலையிலிருந்து இறக்கிக் கொள்ளவோ ஏற்றிக்கொள்ளவோ கூடாது. குருசாமி அல்லது மூத்த ஐயப்பன்மார்களைக்கொண்டுதான் அதனைச் செய்வித்தல் வேண்டும்.

**20.** ஐயப்பன்மார்கள் பம்பைநதியில் நீராடி, மறைந்த தம் முன்னோர்களுக்கு பித்ருதர்ப்பணம் செய்தல் நல்லது

**21.** 18 ஆம் படியில் ஏறும்போது கன்னி ஐயப்பன்மார்கள் முதற்படியிலும், மற்றவர்கள் அவரவர் மலையைக் கணக்கிட்டு, அந்தப் படியிலும் தேங்காய் உடைக்கவேண்டும். மலையை விட்டுக் கீழே இறங்கும்போது, 18 ஆம் படியிலிருந்து கீழ்ப்பக்கமாக அவரவர்கள் மலையைக் கணக்கிட்டு தேங்காய் உடைத்து இறங்கவேண்டும்.

**22.** யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும் ஐயப்பனின் பிரசாதங்களை தலையில் ஏந்தியவாறு வந்து வீட்டு வாயில் படியில் தேங்காய் உடைத்து வீட்டிற்குள் செல்லவேண்டும். பூசை அறையில் பூஜை செய்து கற்பூர ஆரத்தி காட்டி, பிரசாதங்களை எல்லோருக்கும் வழங்கவேண்டும்.


**23.** ஐயப்பன்மார்கள் பம்பையில் சமைக்கும் அடுப்பில் உள்ள சாம்பலும், சந்நிதி ஆழியில் இருந்து கிடைக்கும் சாம்பலும் சேர்த்துக் கிடைப்பததான் **சபரிமலைப் பஸ்பம்.** இது மிகவும் சக்திவாய்ந்தது.

**24.** 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளும், ருதுகாலம் நின்ற வயதான பெண்களும் மட்டுமே சபரிமலை யாத்திரையில் கலந்து கொள்ளலாம்.



**25.** விரத காலத்தில் அசைவ உணவு அருந்துவது மாபெரும் தவறாகும். எனவே, இயன்றவரை வீட்டிலேயே தூய்மையாகத் தயாரித்த சைவ உணவே உண்ண வேண்டும். **மாலை தரித்த ஐயப்பன்மார் வீட்டைத்தவிர மற்றவர்கள் வீட்டில் எக்காரணத்திலும் உணவு அருந்தக் கூடாது.**

**26.** மாலை அணிந்த ஐயப்பன்மார் தங்களது கடமைக்கு இடையூறு இல்லாமல் சுறுசுறுப்புடன் தங்கள் பணிகளை செவ்வனே செய்தல் வேண்டும்.




**27.** யாத்திரை வழியில் அடர்ந்த வனங்களில் காட்டு யானை, புலி, கரடி, முதலான விலங்குகள் இருக்குமாதலால் பக்தர்கள் கூட்டமாக சரணம் பாடிக்கொண்டே செல்லவேண்டும். இரவு நேரங்களில் காட்டிற்குள் மலசலத்திற்காக தனியே அதிக தூரம் செல்லக்கூடாது. **"சரணம் விழித்தல், சங்கு ஒலித்தல், வெடி வைத்தல்"** பாதுகாப்பிற்குச் சிறந்த வழியாகும்.

**28.** ஐயப்பனுக்குக் காணிக்கையாக சுற்றத்தாரும், மற்றவர்களும் கொடுத்து அனுப்பும் காணிக்கையை சந்நிதானத்தில் செலுத்தி அவர்களுக்கு ஐயப்பன் திருவருள் கிடைக்க வேண்டிக் கொள்ளவேண்டும்.

**29.** குருசாமிக்கு தட்சணை கொடுக்கவேண்டிய சமயங்களில் எல்லாம் தாங்கள் விரும்பியதை தங்கள் வசதிக்கேற்றவாறு கொடுத்து, குருவின் அருளைப் பெறலாம். இதில் எந்தவித நிபந்தனையும் கிடையாது. ஐயப்பன்மார்கள் கொடுக்கும் காணிக்கை எவ்வளவாக இருந்தாலும் அதை மன மகிழ்ச்சியுடன் பெரும் பொருளாக ஏற்று, குருவின் குருவான ஐயப்பனுக்கே செலுத்தி, பேரருள் பெற்றுய்வது குருமார்களுக்கு சாலச் சிறந்ததாகும்.

**30.** ஐயப்பன்மார் எல்லோரும் குறிப்பாக கன்னி ஐயப்பன்மார்கள் பெரிய பாதையில் (அழுதைவழி) சென்றுவருவது மிகுந்த பயன் விளைவிக்கும். ஆனால், சிலர் தங்கள் தொழில், கடமை, சூழ்நிலை கருதி எரிமேலியிலிருந்து சாலைக்காயம் வழியாகவும், சிலர் வண்டிப் பெரியாறு வழியாகவும் சபரிமலை செல்கிறார்கள். என்றாலும் மேற்குறிப்பிட்ட பெரிய பாதையில் செல்லும்போது, மலைகளில் விளையும் பல மூலிகைகளின் சக்தி கலந்த காற்றினைச் சுவாசிப்பதாலும், பல மூலிகைகள் கலந்த ஆற்றுநீரில் குளிப்பதாலும் உடல் நலம் ஏற்பட்டு, எழில் மிக்க இயற்கை காட்சிகளைக் கண்டு களிப்பதால் உள்ளம் பூரிக்கிறது. இதனால் பேரின்பமும், பெரு நலமும் அடையலாம். நீண்டவழிப்பயணத்தில் ஐயப்பன் சரணமொழி அதிகம் விழிப்பதால், பகவானின் திருநாம உச்சரிப்பு மிகுந்த பக்தி உணர்வை வளர்க்கிறது.



**31.** பஜனையில் 18 ஆம் படிப் பாட்டுப்பாடி, கடைசியில் மங்களம் பாடவேண்டும்.

**32.** யாத்திரை இனிது நிறைவேறியதும், குருநாதர் மூலம் மாலையைக் கழற்றி, ஐயப்பன் திருவுருவப்படத்திற்கு அணிவித்துவிட்டு, விரதத்தைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். ஐயப்பன் திருவருளால் எல்லா நம்மைகளும் வாய்க்கப்பெற்று பல்லாண்டு இனிது வாழ பகவான் நாமம் பாடித் துதிப்போமாக.



## தாளையடிக் கிழவா....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் யாழ்ப்பாணத்தில் பல்வேறுபகுதிகளிலும் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற கோவில்களில் எதுவும் ஐயனார் கோவிலாக இருப்பதில்லை மாறாக 18 படிகள் மற்றும் இரு கால்களை மடக்கி அமர்ந்திருக்கும் ஐயப்பன் விக்கி ரகங்களுமே வைக்கப்படுகின்றன.

ஒரு வகையில் பார்த்தால் ஐயனார் பக்தர்கள் ஐயப்பன் பக்தர்களாக மாறிய ஒரு மத மாற்றம் இங்கு ஏற்பட்டதை யாரும் கண்டுகொள்வதாயில்லை. இந்து மதத்திலிருந்து சாய்பாபா, அம்மா பகவான், பிரம்ம குமாரிகள், சீரடிசாயிபாபா, குருமகராயி போன்ற பல புதிய கிழைகள் உருவாக்கப்பட்டதன் விளைவாக அவர் கள் இந்து மதத்திலிருந்து பிரிந்து சென்றவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால், ஐயப்பன் விடயத்தில் ஏற்கனவே ஐயனார் பக்தர்களாக இருந்தவர்களே அது ஒரு சிறு தெய்வ அல்லது காவல் தெய்வ வழிபாட்டு மரபை கொண்டிருப்பதால் அதிலிருந்து ஒரு புதிய வழி-பாட்டு முறைக்கு தம்மை மாற்றியுள்ளனர்.

**இந்து மதத்தில் ஏற்பட்டு வருகின்ற இவ்வாறான மாற்றங்கள் தொடர்பில் இந்து கலாசார அமைச்சோ பல்க லைக் கழகங்களிலுள்ள இந்து நாகரிகத் துறையினரோ, வரலாற்று துறையினரோ ஆக்கபூர்வமான ஆய்வுகள் எதனையும் செய்யாதிருப்பதும், இது விடயத்தில் மக்களு-க்கு தெளிவை ஏற்படுத்தாதிருப்பதும் இற்றை வரை இந்து மதம் ஒரு நிறு வனத் தன்மையை அடையவில்லை என்ப தையே சுட்டி நிற்கி றது.**

ஐயப்ப வழிபாட்டினை ஐயனார் கோயில்களில் முன் நிறுத்துவதால் இந்து மதத்தின் தொன்மையான ஐய னார் வழிபாடு அழிந்து செல்கிறது. அதனூடாக ஒரு தொல் குடியின் வணக்க முறையும் மறுதலிக்கப்படுகி-றது என்பதும் உண்மையே.

# காவி உடை அணிவதன் நோக்கம்

இது ஞானம் என்னும் நெருப்பை அடையாளம் காட்டுவது நெருப்பால் சுடப்பட்டால் பழுப்பு நிறம் வந்து விடுகிறது. ஞானம் என்னும் நெருப்பு தீயவர்களைச் சுட்டு அழிக்கிறது. அப்படி புடம் போடப்பட்டவர்களை இந்த உடை அடையாளம் காட்டுகிறது. உடைகள் பருத்தியி-னால் தயார் செய்த உடைகள். நம் உடலுக்கு நல்லது. மேலும் காவிக் கலர், நீலம், கறுப்புக் கலர் இவைகள் நம்முடைய உணர்ச்சிகளுக்குச் சாந்தம் அளிக்கி-றது. இந்த ஆடைகளை அணிந்தால் அப்படி ஒரு தூய் மையுடன் வாழவேண்-டிய உணர்வு தானாகவே வந்து விடும்.



பொலிஸ்காரர், நர்ஸ் ஆகியோரை அடையா ளம்காண ஒரு தனி உடை தேவைப்படுகி றது. துறவிகளுக் அடை யாளமாக இப்படி பழுத்-துவிட்ட நிலமையே பழு-த்த இலையின் நிறமான காவி உடை உணர்த்-துகிறது.

ஆகவே, தான் காடுகளிலும், மலைகளிலும், மரத்-தடிகளிலும், சிறந்த ஆலயங்களிலும் வாசம் செய்கின்ற துறவிகள் காவி உடைதரித்துக் கொள்கிறார்கள். மேலும் இம்மகிமையை விளக்கவே நமது ஆலயங்களிலும் கொடி ஏற்றங்கள் நடைபெறும் பொழுது அந்தக் கொடிச் சீலைகளிலும் வரைந்திருக்கும் படங்களும் காவியினா-லேயே எழுதப்படுகின்றன.

# கன்னி பூஜை என்றால் என்ன?

சபரிமலையில் குடிகொண்டிருக்கும் ஐயப்பனை தரிசிப்பதற்கு வருடாவருடம் ஐயப்பமார்கள் சபரிம லைக்கு வருகிறார்கள். அப்படி புதிதாக வருகிற ஐயப்ப-மார்களை கன்னிச்சாமிகள் என்று அழைக்கிறோம். கன்னி ஐயப்பன் கார்த்திகை மாதம் முதலாம் திகதி யில் குருநாதரின் மூலம் மாலை அணிந்து நாற்பத்தி யொரு நாள் விரதமிருந்து சபரிமலைக்குப் பெரியபாதை வழியாக போகிறார்கள். போகிறவழியில் பம்மையில் ஒருநாள் தங்கி கன்னி ஐயப்பமார்கள் எல்லோரும் சேர்ந்து ஸ்ரீ தர்ம சாஸ்தாவை வழிபாடு செய்கிறார்கள். அதன் பின் ஐயப்பமார்களுக்கு அன்னதானம் செய்வது வழக்கம். அதற்குத்தான் சக்தி பூஜை அல்லது கன்னி-பூஜை என்று பெயர்.

புண்ணிய நதியான பம்பையில் இப்பூஜை செய்வ-தால் பகவான் ஐயப்பனே நேரில் வந்து பக்தர்களுடன் தானும் சக்தி செய்வதாக ஐதீகம்.

பகவான் சக்தியிட்ட இலையையும், குருநாதர் இலையையும் பக்தர்கள் ஏலம் விடுகிறார்கள். ஏலம் எடுத்தவர்களின் தலையில் தூக்கிவைத்து **சுவாமி நிந்-தகத்தோம் ஐயப்பத் திந்தகத்தோம்** என்று ஆவேசமாக ஆடிப் பம்பை நதியில் இலைகளைப் போட்டு நீராடிவி ட்டு குருநாதரிடம் ஆசிபெற்றுக் கொள்கிறோம்.

ஏலம்விட்ட பணம் சன்னிதானத்தில் உண்டிய லில் காணிக்கையாகச் செலுத்தி விடுகிறார்கள். சக்-திபூஜையைச் செய்த கன்னி ஐயப்பமார்கள் விரும்பும் வரங்களைப் பெற்று மன நிம்மதியான நல்வாழ்வை அடைவார்கள் என்பது திண்ணம்.



## ஸ்ரீ ஐயப்பன் வரலாறு.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

எனவே, ஐயப்பமார்கள் இத்துளசி மாலையை அணிவதே சாலச் சிறந்தது. அதுமட்டுமா? துளசி நீரைத் தினம் அருந்தி வந்தால் உடல் பிணிகள் நீங்கிச் சுகமடைவோம். துளசி மாலையை அணிந்தவுடன் எம்மை அறியாமலேயே ஒரு புத் துணர்ச்சி பெறுவோம். அதுமட்டுமன்றிக் காட்டு மிருகங்க-ளிலிருந்தும் கொடிய விஷ ஜந்துகளிடமிருந்தும் காப்பற்றப் படுகிறோம் என்பதையும் மறக்கலாகாது. துளசித் தாயா-னவள் துணையிருக்கும்போது மனக் கலக்கம் எதற்கு?

### ஏன் புலால் உண்ணக்கூடாது?

புனிதத் தாயின் மாலை கழுத்தில் இருக்கிறது. வருடத்-தில் 300 நாட்கள் நாம் விரும்பியதைச் செய்கிறோம். மிகுதி 65 நாட்களே அடுத்து வரும் நாட்களை எப்படி வாழப்போகி றோம் என்பதன் பரீட்சையே விரதம். தாவர போசனம் சாத் வீக உணவு. புலால் காம உணர்ச்சிகளைத் தூண்டக் கூடி யது. இத்துடன் வெங்காயம், பூண்டு, காரம் என்பவற்றை யும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் இந்திரி யங்களின் சேஷ்டையினால் விரத பங்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே, புலால் உண்பது ஐயப்ப விரதத்தில் முக்கி யமாகக் கடைப்பிடிக்கப்படும் பிரம்மச்சரிய விரதத்திற்கு ஊறு விளைவிக்கும். அதனால் புலால் உணவைத் தவிர்க்க வேண்டியது ஐயப்பமார்களின் கடமைகளில் ஒன்றானது.

### இருவேளை எதற்காக நீராட வேண்டும்?

காலையில் சூரிய உதயத்திற்கு முன்பும், மாலையில் சூரிய அஸ்தமனத்திற்குப் பின்பும் நீராடுவது சாலச் சிறந்தது. உடலில் உள்ள உஷ்ணம் கடத்தப்படுகிறது. தேகம் பக்குவப் படுகிறது. மார்கழி மாதத்தில் பனியும் குளிரும் காட்டில் சற்று அதிகமாகவே இருக்கும். எனவே, இருவேளை நீராடிப் பழ கிக் கொண்டால் எக்குளிரையும் எம்மால் தாங்கிக்கொள்ள முடியும்.

### ஏன் கறுப்பு ஆடை அணிய வேண்டும்?

கறுப்பு ஆடை மங்களகரமற்றது என்றும் துக்க காரியங்க ளுக்கும் சிலர் அணிகின்றனர் எனச் சிலர் அவலட்சண மாகக் கருதுகின்றனர். ஐயப்பனுக்கு உகந்தது கறுப்பு நிறமே! கொடிய மிருகங்கள் வாழும் காட்டில் கறுப்பு உடையணிந்த ஐயப்பமார்கள் பளிச்சென்று தெரிவதில்லை. இருள் சூழ்ந்த வேளையில் நாமும் இருளாகவே இருப்போம். அடுத்ததா-கக் கறுப்பு நிற ஆடை அணிந்தவர்கள் ஐயப்பமார்கள் என்று வீட்டுக்கு விலக்கான பெண்கள் தாமாகவே ஒதுங்கிக் கொள்வார்கள்.

### ஏன் படுக்கை தலையணையை நீக்கிச் சிறு துண்டை மட்டுமே தரையில் விரித்துத் துயில வேண்டும்?

மலைக்கு இவற்றைக் கொண்டு செல்ல முடியாது. அத்-துடன் தலையணையும், படுக்கையில் சிந்தனையைத் திசை திருப்பி மனக்கிலேசம் ஏற்பட்டு விரதபங்கம் ஏற்பட வாய்ப்பு-ண்டு. நம் முன்னோர்கள் படுக்கையிலா உறங்கினார்கள்?

### பாதணி ஏன் அணியக்கூடாது?

காடு மலைகளைக் கடக்கும் போது பாதணி நல்ல பலனைக் கொடுக்காது. சிலவேளைகளில் சறுக்கவும் வாய்ப்பு-ண்டு. அதுமட்டுமன்றி ஐயப்ப பக்தர்களுக்கு ஒரே நியதி. ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், பெரியோர், சிறியோர் என்பவை ஐயன் சன்னதியில் கிடையாது.

ஆம், கலியுக வரதன் அவதரித்து நமது கவலை, கஷ்டங்களை நீக்கிக் கருணை வடிவமாகச் சபரிமலையில் எழுந்தளியிருக்கும் ஸ்ரீ ஐயப்ப சுவாமியைத் தரிசிக்கக் கடுமையான விரதமிருந்து, இருமுடிதாங்கி, காடு மலை களையெல்லாம் கடந்து தரிசன வேட்கையைத் தவிர வேறு எதுவுமின்றி, நாவிற்கினிய சரணங்களை முழங்கி, அவன் திருவடியைச் சரணடைவோரை தெய்வமாக்கவல்ல சபரி-மலை ஸ்ரீ ஐயப்பன் விரத மகத்துவம் அளவிடக் கரியதாகும்.

சாமியே சரணம் ஐயப்பா!

# பேத்தா துள்ளல் நடனம் (வேட்டைத்துள்ளல்)



இந் நடனம் மகர விளக்குக் காலத்தில் பக்தர்க-ளால் ஆடப்படுவது. மார்கழி நடுப்பகுதியில் இருந்து தை நடுப்பகுதி வரை இதற்கான காலமாகும்.

எறும்லி என்ற இடத்தில் மகிஷி என்ற அரக்கியை கொன்ற ஐயப்பன் அவளது பிணத்தின் மீது நின்று ஐயப்ப-னால் ஆடப்பட்ட நடனமாகவே இந் நடனம் வர்ணிக்கப்படுகி றது. அந் நிகழ்வை நினைவு படுத்துவதற்காகவே வருடா-வருடம் ஐயப்ப பக்தர்களால் இந் நடனம் ஆடப்படுகிறது.

இந் நடனம் ஆடும் போது கறுப்பு நிற உடை அணிந்து பல வர்ணக்கொடிகளைக் கொண்டு உடலை அலங்-கரித்த குதூகலமாக ஆடப்படுகிறது. இந் நடனத்தின் போது "ஐயப்பா தன் தகதோம்", "சுவாமி திந்தக தோம்" என்று பக்தர்கள் பாடுவார்கள்.

இந் நடனம் வாவர் பள்ளிக்கு முன்னால் உள்ள கொச்சம் பலம் என்ற பகுதியில் ஆடி பின்னர் வாவர் பள்ளிக்-குச்சென்று வாவர் சுவாமியை வணங்கிய பின் வள்ளிய-ம்பலத்திலுள்ள தர்ம ஸாஸ்தா கோவிலுக்குச் செல்வர்.

இவ் வணக்கத்தின் மூலம் பாவங்களை போக்குவ-தாக கூறப்படுகின்றது. மேற்படி நடனம் உரிய மரபுப்படி தொடங்கப்பட்டதும் கழுகுகள் வானத்தில் சுற்றிப்பறப-பதை காணமுடியும் இக் காட்சியானது விஸ்ணு தனது கழுகு வாகனத்தில் வந்து இப் பேத்தா துள்ளல் நடனத்தை ஏற்றுக்கொள்வதன் அடையாளமாக நம்பப்படுகிறது.

இந் நடனத்தை ஆடும் போது அம்பு, வில்லு, ஈட்டி போன்ற பல ஆயுதங்களை செயற்கையாக செய்து அவற்றை ஏந்தியவாறு நடனமாடுவர்.

# ஐயப்பனை வணங்கும் தத்துவமென்ன?

சிவபெருமான் - விஷ்ணு இருவருக்கும் பிறந்த புத்திரன் ஐயப்பன் என்று கூறுகிறோம். அவர்கள் இருவருடைய சக்தியும் ஹரிஹர புத்திரனுக்கு உண்டு. எல்லாவிதமான ஆக்க சக்திகளையும் அவர் நாராயணனைப்போல் காப்பாற்ற வல்லவன் சாஸ்தாவை வணங்கும் பக்தர்களிடமும் நாம் இந்த பண்பைக் காணலாம். வாழ்க்கையில் நம்மை உலகப் பற்றோடு இணைக்கும் ஆசைகளை இவர்கள் ஒதுக்குகிறார்கள். இறைவனை வழிபடும் உணர்வை மிக உன்னதமாக ஒற்றுமையாக இணைத்துப் போற்றிக் காப்பாற்றுகிறார்கள். அவர்கள் அந்த வழிபாட்டின் ஒரே குறிக்கோளுடன் ஒரே நேரத்தில் முனைந்து செயற்படுகிறார்கள். இது அவர்களுக்குத் தனியாக வேகத்தையும் சக்தியையும் அளிக்கிறது.



ஐயப்பனின் திருக்கோயில் மலை மீது இருக்கிறது. அதுவும் காட்டுவழியில் கரடுமுரடான கல்லும் முள்ளும் நிறைந்த பாதையின் முடிவில் இருக்கின்றது. அதை அடைய இவற்றைப் பொருட்படுத்தாமல் பக்தி உணர்வுடன் வழிநடந்தாக வேண்டும். வாழ்க்கையில் இப்படிக் கர்ம சிரத்தையுடன் கடவுளை அடையப் பக்தி உணர்வை மேற்கொண்டு நடந்தால் தான் முக்தி கிட்டும் என்பதை அது உணர்த்துகிறது. அப்படி நடப்பவர் உலக பந்தங்களை நாடுவதில்லை. இதைப்போல் ஐயப்ப பக்தர்களும் உலகப் பற்றைத் தூண்டும் ஆசைகளை ஏற்பதில்லை. மற்ற ஆலயங்களைப் போல் அன்றி, ஐயப்பனை நாடிச் செல்பவர்கள் கடுமையான விரதத்தை மேற்கொள்வது ஆண்டவனின் கருணையை முழுமையாக அடையத் தவம் இருப்பது போலாகும். தவம் இருப்பவர்கள் ஆண்டவனின் அருளை நாடிச் சரணம் அடைந்து விடுவதைப் போல இவர்களும் ஐயப்ப சுவாமி சரணம் என்ற சொல்லி மனதைப் பக்குவப் படுத்திக் கொள்கிறார்கள். **இவர்கள் கறுப்பு உடையையும் காவித் துணியையும் மட்டுமே நாடுகிறார்கள். கறுப்பு என்பது இருளை ஏற்று அதிலிருந்து ஞான ஒளியை நாடிச் செல்வதைக் குறிப்பது காவி நிறம். தூய்மையைப் பெற நெருப்பின் சக்தியில் இணைந்து புறப்படும் வைராக்கியத்தைக் குறிப்பது.**

இவை இரண்டையும் உடல் ஏற்பதின்மூலம் உள்ளம் விசராந்தியான உணர்வைப் பெறத் தயாராகிறது. மலை ஏறி இறுதியில் படிகளை எட்டும் வரையில் பக்தர்கள் வேறு எதையும் சிந்திப்பதில்லை. வாழ்க்கைப் பாதையில் இறுதியில் முக்தியைத் தருபவன் இறை அருளை ஒன்றை மட்டுமே துணைக்கொண்டு செல்வதை இது காட்டுகிறது. அப்படி வாழ்க்கையை நடத்திச் செல்பவன் இறுதியில் கடவுளின் அருளைப் பேரொளியாகக் கண்டு மகிழ்கிறான். ஐயப்ப பக்தர்கள் கடைசியில் பெறும் ஜோதி தரிசனம் இதையே உணர்த்துகிறது.

மாலை அணிந்த ஐயப்ப இல்லங்களில் நமது பெண்களின் கடமைகள் வழக்கம்போல் கார்த்திகை மாதம் நம்மை நெருங்கிவிட்டது. கடந்த பல மாதங்களாக ஐயனை மறந்தவர்கள் கூடக் கார்த்திகை என்றதும் புத்துயிர் பெற்றுவிடுவார்கள். தங்கள் வீட்டு ஐயப்பமார்கள் சபரிமலை நினைவு படுத்தியும் வீடு சுத்தம் செய்து ஐயப்பமார்களுக்குத் தேவையான எல்லா ஒத்துழைப்புகளும் முன்னரே செய்ய ஆரம்பிப்பது நமது வீட்டுப் பெண்கள் தான்.


தங்கள் வீட்டிலுள்ள பெண்கள் பரிபூரண ஒத்துழைப்பு இல்லாமல் எந்த ஐயப்பனும் நிம்மதியாகச் சபரிமலைக்குச் சென்ற வர இயலாது. மொத்தத்தில் ஐயப்பமார்களுக்கு ஐயன் தரிசனம் கிடைத்தாலும், அதன் பலன் முதலில் தங்கள்வீடுகளிலிருக்கக்கூடிய பெண்களையே சாரும் என்பதில் ஐயமில்லை. இப்படிப் பலனடைபவர்கள் உண்மையில் நமது வீட்டுப் பெண்களே ஆவார்கள்.

எந்த விதமான சஞ்சலமுமில்லாமல் ஒரே மனதுடன் தங்கள் துயரங்களை ஒப்புவித்து வணங்கக்கூடிய ஒரே இந்துக் கோயில் ஸ்ரீ ஐயப்பன் கோவில்தான் என்பதில் சந்தேகமில்லை.


நமது பெண்கள் விரதம் இருந்து மாலை போட்டுப் சபரிமலைக்குப் போகவேண்டிதில்லை. போகாமலே அதன் பலனை அடைந்துவிடலாம். சுவாமிமார்கள் தங்களின் விரத மகிமையால் நாம் நினைத்த காரியங்கள் சித்தியாவதுடன் ஐயப்பனின் கிருபாகடாக்ஷமும் பெருமைகளும் ஒவ்வொரு ஆண்டும் வித்தியாசமான முன்னேற்றம் ஏற்படும் என்பதில் உன்னிப்பாகப் பார்த்தால் நன்றாகப் புரியும்.

இதையெல்லாம் நினைக்காமல் பெண்கள் மாலை அணிந்து சபரிமலைக்கு வருவதினால் பல இன்னல்களுக்க ஆளாவதுடன் ஐயனின் விரதத்தின் மகிமையை நிறைவேற்ற இயலாமல் போய் விடுகிறது. ஐயப்பன் ஆலயம் பல சட்டதிட்டங்களுக்க உட்பட்டுச் சபரிமலை பிரயாணம் செய்ய வேண்டும் என்பதை மறந்துவிடாதீர்கள்.


**குருசாமியும், அறங்காவலரும்**
**கி.அரிகரசுதசர்மா**
**ஈழத்து சபரிமலை,**
**யாழ்.கோண்டாவில் சபரீச**
**ஐயப்பன் தேவஸ்தானம்,**
**இலங்கை.**



CAPS
Shupathy Printers
Smart Kids
Digital Banner
And
Fitting
#52 ,Palaly road,
Thirunelvely north
Jaffna
T.P.No:0212052240

சாரங்கன்
பூஞ்சோலை
Reg.No.NA/DS/1464
ஏம்மிடம் சகலவிதமான பூக்கன்றுகளையும் பூச்செடிகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
No.295C Palali Road,
Jaffna.
Mobile:0770418005


ERIC GANESH
OPTICALS
Branches:
107, K.K.S Road, Chunnakam.
021 224 0255
K.K.S. Road, Kokkuvil.
021 222 5233
Head office:
566, Hospital Road, Jaffna.
021 222 2486





34, Brown Road,
Jaffna.
021 221 9129
077 654 1501
jeyasriprinters82@gmail.com
We Print Your Imagination...
JEYASRI
printers




Sooriya
Hardwares
கட்டடப் பொருட்கள், மின்சாதனப் பொருட்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி
தொ.பேசி: 077 9672274







Printed By: Jeyasri, Jaffna. 021 221 9129